# சர்வவியாபி

MISSION PRESS 1840

SARVA VIABI

07-10-2018 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | விளம்பி வருடம் புரட்டாசி 21 | வருட சந்தா ₹ 150 தனிப்பிரதி ₹ 6

புத்தகம் 112 பக்கம் - 12 | இதழ் 39 | e-mail:missionpress48@gmail.com e-mail:missionpress48@yahoo.com | Ph: 0413/ 2334360 | ஆசிரியர்: அருள்தந்தை C. அந்தோனி ரோச்


## செய்தியாளர்களுக்கு திருத்தந்தை வழங்கிய நேர்காணலில், திருப்பீட-சீன உறவு, மற்றும் போர்க் கருவிகளை அழிப்பது.



பால்டிக் நாடுகளில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மேற்கொண்ட திருத்தூதுப் பயணத்தின் இறுதியில், உரோம் நகர் திரும்பும் வேளையில், செய்தியாளர்களுக்கு வழங்கிய நேர்காணலில், திருப்பீட-சீன உறவு, மற்றும் போர்க் கருவிகளை அழிப்பது ஆகியவை முக்கியக் கருத்துக்களாகப் பேசப்பட்டன.

செய்தியாளர்களின் கேள்வி களுக்கு, முதலில் திருத்தூதுப் பயணத்தைக் குறித்து அமைவது நல்லதென்று கூறியத் திருத் தந்தை, தான் பயணம் மேற் கொண்ட மூன்று நாடுகளும், அந்நிய ஆக்ரமிப்புக்களைக் கண்டாலும், அவை, தங்கள் தனித்துவத் தைக் காப்பாற்றி வந்துள்ளதைக் கண்டு தான் வியந்ததாகக் குறிப்பிட்டார். வில்நியூஸ் நகரில், சித்திரவதைக் கூடங்களை காணச் சென்றதை, குறிப்பாக எடுத்துரைத்தத் திருத்தந்தை, இன்றும் சித்திரவதைகள், பல்வேறு வடிவங்களில் தொடர் வதைக் குறித்து, ஆழ்ந்த வேதனையை வெளியிட்டதோடு, போர் கருவிகளும், சித்திரவதைக் கருவிகளும் வர்த்தகமாக மாறியுள்ளதை, வன்மையாகக் கண்டனம் செய்தார்.

திருப்பீடத்திற்கும், சீன அரசுக்கும் இடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தம், பல ஆண்டுகளாக சீன அரசின் சிறைகளில் வாடிய ஆயர்களுக்கும், கத்தோலிக்கருக்கும் பெரும் ஏமாற்றத்தை உருவாக்கியுள்ளது என்ற கருத்தில் துன்புற்றோரின் வேதனை களை தான் உணர்ந்துள்ளதாகவும், கத்தோலிக்க திருஅவை சீனாவில் வளர்வதற்கு ஏற்ற ஒரு சமரச முயற்சியாக உருவாகி யுள்ள இந்த ஒப்பந்தத்திற்கு, தான் முழு பொறுப்பு ஏற்பதாகவும், இதனால் ஏமாற்றமும், வேதனையும் அடைந்துள்ளோர் இதன் நல்விளைவுகளைக் காண்பர் என்று தான் நம்புவதாகவும் கூறினார். சீன அரசுக்கும், திருப்பீடத்திற்கும் இடையே நல்லுறவு களை உருவாக்க மேற்கொண்ட முயற்சிகள், இரு அடி முன்னேறினால், ஓரடி பின்னோக்கி திரும்பியுள்ளது என்ற உருவகத்தைப் பயன்படுத்தி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இந்த முயற்சிகளை விவரித்தார். எந்த ஓர் ஒப்பந்தமும் துன்பங் களைக் கொணர வாய்ப்பு உண்டு என்று கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இந்த ஒப்பந்தத்திற்கு எதிராக, ஒரு சிலரது குரல்கள் எழுந்துவரும் அதே வேளையில், பல சீன ஆயர்கள், அருள்பணி யாளர்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் இந்த ஒப்பந்தத்திற்கு எதிராக, ஒரு சிலரது குரல்கள் எழுந்துவரும் அதே வேளையில் பல சீன ஆயர்கள், அருள்பணியாளர்கள் துறவியர் மற்றும் பொதுநிலையினர் இந்த ஒப்பந்தத்தை மதித்து, ஆதரித்து, தங்கள் கருத்துக்களைக் கூறியுள்ளனர் என்று எடுத்துரைத்தார்.

## சாவு வரை வாழ்வை மற்றவர்களுக்கு அர்ப்பணிக்க...



புனிதத்துவத்திற்கும், பிறரன்பின் பாதையில் இணைந்து நடைபோடுவதற்கும், விடுக்கப்படும் அழைப்பை, ஒவ்வொரு கிறிஸ்தவரும் உணர்ந்து செயல்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி செயலாற்றிவரும் ரொஸ்மினியன் துறவு சபையை பாராட்டுவதாகத் தெரிவித்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

அருளாளர் Antonio Rosmini என்பவரால் துவக்கப்பட்டு, ரொஸ்மினியர்கள் என அழைக்கப்படும் பிறரன்புத் துறவு சபையின் உலகப் பொது அவைக் கூட்டத்தில் கலந்து கொண்டோரை, இத்திங்கள் காலை, திருப்பீடத்தில் சந்தித்து உரையாடிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், திருத்தந்தையின் திருப்பீடத்திற்கு எல்லையற்ற மதிப்பையும், அதனோடு நெருங்கிய தொடர்பையும், பாசத்தையும் ஒவ்வொரு கிறிஸ்தவரும் தங்களுக்குள் வளர்த்துக் கொள்ளவேண்டும் என்ற அச்சபை நிறுவனரின் வார்த்தைகளை மீண்டும் நினைவூட்டினார்.

புனிதத்துவமும், நற்செயல்களை செயல்படுத்துவதும் ஒரு சிலருக்கோ, ஒரு சில நேரங்களுக்கோ மட்டும் உரியதல்ல, மாறாக எல்லா வேளைகளிலும், எல்லாராலும் கடைப்பிடிக்கப் பட வேண்டிய கடமை அது, என்பதையும் எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சாவு வரை நம் வாழ்வை மற்றவர்களுக்காக அர்ப்பணம் செய்ய வேண்டும், என்பது இச்சபையின் நிறுவனர், ரொஸ்மினி அவர்களின் நோக்கமாக இருந்தது என்றார். அனைத்திற்கும் மேலாக, பிறரன்பு விளங்க வேண்டும் என்று கூறிய புனித பவுலின் வார்த்தைகளுக்கு ஏற்ப, தன் சபைக்கு பெயர் வைத்துள்ள அருளாளர் ரொஸ்மினி அவர்கள், பிறரன்புடன் உள் மன அமைதியும் ஒத்திணங்கிச் செல்ல வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டிச் சென்றுள்ளார் என்றார் திருத்தந்தை.

ரொஸ்மினியன் துறவு சபையின் கல்விப் பணியையும் பாராட்டியத் திருத்தந்தை, அவர்கள் இந்தியா, டான்சானியா, கென்யா, அமெரிக்க ஐக்கிய நாடு மற்றும் ஐரோப்பாவில் பரவி பணியாற்றி வருவது குறித்து, தன் மகிழ்ச்சியை வெளியிட்டார். ரொஸ்மினியன் துறவு சபையினர், தாங்கள் பெற்றுள்ள தனி வரத்தின் துணை கொண்டு, நற்செய்தி அறிவிப்புப் பணியை தொடர்ந்து செயல்படுத்த ஊக்கமளித்து, அவர்களுக்கு தன் ஆசீரையும் அளித்தார் திருத்தந்தை பிரான்சிஸ். ●

ஆசிரியர் பேனா...

# இந்தோனேசியா மக்களுக்காக செபிப்போம்

**கடந்த 28-9-2018 வெள்ளி அன்று** இந்தோனேசியாவில் இடம் பெற்ற நிலநடுக்கம் - சுனாமி - நிலச்சரிவுகளுடன் பெருவெள்ளம் - ஆகியவற்றினால், அந்நாட்டின் கடலோர நகரம் "பாலூ" மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. ரிக்டர் அளவில் 7.5 என பதிவான இந்த கடுமையான நில நடுக்கம் இந்தோனேசியா ஒட்டியுள்ள இந்திய பெருங்கடலில் நிகழ்ந்துள்ளது. பதினெட்டு அடி உயர இராட்சத அலைகள் எழும்பி கடுமையாக கடற்கரைப் பகுதிகளை தாக்கி உள்ளது. இதனால் நிலம் பல இடங்களில் திடத்தன்மை இளகி லிக்வி∴பிக்கேஷன் சாயில் (Liquification Soil) இடம் பெற்று, பல இடங்களில் வீடுகளும் கட்டிடங்களும் புதைந்துள்ளன; பல கட்டிடங்கள் நீரும் சகதியும் நிறைந்த மண் சரிவு மற்றும் நகர்வினால் இடம் பெயர்ந்து உடைந்து போயுள்ளன.

**இந்த இயற்கை சீரழிவில் 1500 க்கும்** அதிகமானோர் உயிரிழந்துள்ளதாக செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. மூன்று லட்சத்து எண்பதாயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் வீடு இழந்து, உடமைகள் இழந்து ஒன்றுமில்லா நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளனர். இறந்தவர் களின் சடலங்கள் கும்பல் கும்பலாக புதைக்கப்பட்டு வருகின்றன. பலபேர் காணா மல் போன தங்கள் உறவுகளைத் தேடிக்கொண்டிருக் கின்றனர். தொலைத் தொடர்பு, மின்சாரம், குடிநீர், உணவுப் பொருள் கடும் தட்டுப்பாடு நிகழ்ந்துள்ளது. மக்கள் பலபேர், மூடப்பட்டு இருக்கும் கடைகளின் கதவுகளை உடைத்து உணவுப் பொருட்களை அள்ளிச் செல்கின்றனர். அப்போது ஏற்படும் கலவரத்தைக் கட்டுப்படுத்த போலீசார் கடும் நடவடிக்கை மேற்கொள் கின்றனர். பல மருத்துவமனைகள் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் காயமுற்றவர்களால் நிரம்பி வழிகிறது.

**தொடக்கத்தில் தாங்களே சமாளித்துவிட** முடியும் என்று நம்பிய அந்நாட்டு அதிபர் ஜாக்கோ, இப்பொழுது சேதாரம் கட்டுக்கடங்காத நிலையை எட்டியிருப்பதால் சர்வதேச உதவியை நாடியுள்ளார். செஞ்சிலுவைச் சங்கத்தினர் முதன் முதலில் செயலில் இறங்கியுள்ளனர்.

♦ **"பாலூ" நகரில் கடற்கரையில்** ஏராளமான மக்கள் அன்றைய உள்ளூர் விழாவுக்கு காத்திருப்பதை யும், அப்போது ஒரு மாடியிலிருந்து சுனாமி வருவதை கண்ட ஒருவர் "சுனாமி, சுனாமி, ஓடுங்கள்" என்று அலறும் காட்சி சமூக வலைத்தளங்களில் பார்ப்பவர்களை அதிர்ச்சி அடையச் செய்கிறது.

♦ 2004-ஆம் ஆண்டு பல லட்சம் உயிர்களைப் பலி வாங்கிய சுனாமிக்குப் பிறகு, சுனாமியை முன்கூட்டியே கண்டறியும் கடல் மேல்மட்டத்தில் மிதக்கும் சாதனங் களை அமெரிக்கா, ஜெர்மனி, மலேசியா ஆகிய நாடுகள் இந்தோனேசியாவுக்கு நன்கொடையாக வழங்கின. இந்த ஐம்பது கருவிகளை முறையாக பராமரிக்காத தாலும், சிலர் இவற்றை திருடிச் சென்றதாலும், சில கருவிகள் கப்பல் போக்குவரத்தில் சிதைந்ததாலும் சுனாமி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முறையாக நடைபெறவில்லை என ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

♦ அரசு வெளியிட்ட கணிப்பின்படி 3 மீட்டர் உயர அலைகள் எழக்கூடும் என்று நம்பியிருக்க, ஆறு மீட்டருக்கும் அதிகமான உயர அலைகள் தோன்றி பெரும் சேதத்தை உருவாக்கியுள்ளது.

♦ இத்தகைய இயற்கைப் பேரிடர்களை நோக்கும் போது, இவை மனித அலட்சியத்தாலும், இயற்கை அதிக அளவு சுரண்டப்படுவதாலும், இயற்கையை தவறாகப் பயன் படுத்துவதாலும் (நியூக்கிளியர் குண்டு பரிசோதனை) இயற்கை சில இடங்களில் பலமிழந்து சிதைவுக்குள்ளாகும் போது இத்தகைய பேரிடர்களை மனித குலம் சந்திக்க வேண்டியிருக்கிறது.

♦ இயற்கை வளச்சுரண்டல்கள், வனப்பகுதிகள் அழிப்பு, அளவுகடந்து கனிமங்களை அகழ்ந்தெடுத்தல், ஆற்று மணல் கொள்ளை, சுற்றுச்சூழல் பாதிப்புகளை உண்டாக்கும் தொழிற்சாலைகளை ஆண்டுமுழுதும் இரவு பகலாக இயக்கி காற்று, நீர், நிலம் மாசடையச் செய்தல் ஆகிய காரணங்களால் இயற்கை தாக்குதலுக்கு உள்ளாகிறது. அளவுகடந்த பிளாஸ்டிக் பயன்பாடு, பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை நிராகரிப்பு ஆகியவற்றால் செயற்கைப் பொருளான பிளாஸ்டிக் இயற்கையின் பல கூறுகளை சிதறடிக்கிறது. அணு மற்றும் நியூக்ளியர் போர் தளவாடங்களை உருவாக்கு வதில் மிஞ்சும் கழிவுகள், இ-வேஸ்ட் எனப்படும் மின்னனு சாதனக் கழிவுகளை முறையாக அகற்றாமல் விடுவதால் நிகழும் சுற்றுச்சூழல் பாதிப்புகளை கண்டுகொள்ளாமல் வருவது மனித வாழ் சூழலில் பாதிப்புகளை உண்டாக்கி, பல நோய் தாக்குதலுக்கு மனித இனம் இலக்காகி விடுகிறது.

♦ 2004ஆம் ஆண்டில் நிகழ்ந்த சுனாமி பாதிப்புகள், அண்மையில் கேரளாவில் நிகழ்ந்த பெருமழை, 2015-இல் சென்னை, கடலூரில் இடம்பெற்ற பெருவெள்ளம் எல்லாம் நமக்கு நினைவிருக்கிறது. ஆனால், நாம் கற்றுக் கொண்டது என்ன என்பதை சிந்திக்கும் சூழலுக்கு தள்ளப்படுகிறோம்.

இந்தோனேசியா மக்களின் இந்த பேரிடர் சூழலில் இறைவன் அவர்களுக்கு துணை நிற்க செபிப்போம். சர்வதேச அளவில் அவர்களுக்கு உதவிகள் கிடைக்கவும் செபிப்போம். ●

## வாரத்திருநாட்கள் அக்டோபர் - 2018

7 ஞாயிறு ப
ஆண்டின் பொது காலம் 27-ஆம் ஞாயிறு
தொ.நூ.2:18-24 மாற்கு 10:2-16
எபி.2:9-11

8 திங்கள் ப
கலா.1:6-12 லூக்.10:25-37

9 செவ்வாய் ப
கலா.1:13-24 லூக்.10:38-42

10 புதன் ப
கலா.2:1-2,7-14 லூக்.11:1-4

11 வியாழன் ப.வெ
புனித திருத்தந்தை 23-ஆம் ஜான்
கலா.3:1-5 லூக்.11:5-13

12 வெள்ளி ப
கலா.3:7-14 லூக்.11:15-26

13 சனி ப
கலா.3:22-29 லூக்.11:27-28

14 ஞாயிறு ப
ஆண்டின் பொது காலம் 28-ஆம் ஞாயிறு
சா.ஞா.7:7-11 மாற்கு 10:17-30
எபி.4:12-13




## ஆண்டின் பொதுக்காலம் 28ஆம் ஞாயிறு (14-10-2018) தொ.நூ.2:18-24;எபி.2:9-11;மாற்கு.10:2-16

# "போதும்... இப்படியே..."

அருள்திரு. P. லூர்து ஜெயராஜ்,
துணை முதல்வர், பெத்தி செமினேர்
மேல்நிலைப்பள்ளி, புதுவை.



ஜீவா வேலை முடிந்து, வீட்டிற்கு தனது இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார். வழியில் ஒரு முதியவர் கோர விபத்தினால் பலத்தக் காயத்துடன் துடித்துக் கொண்டிருந்தார். இதைக்கண்ட ஜீவா உடனே 108 க்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவசர சிகிச்சைக்கு அனுப்பி வைத்தார். அதோடு நில்லாமல் தனது வாகனத்தில் மருத்துவமனைக்குச் சென்று அம்முதியவருக்கு தேவையான உதவியைச் செய்துவிட்டு தனது வீடு திரும்பினார்.

இங்கு ஜீவாவிடம் உதவி செய்யும் மனம் இருந்ததையும் அதை செயலில் காட்டுவதையும், உள்ளத்து உணர்வினால் தூண்டப்பட்டுசெயல்படுவதையும் நாம் காணலாம்.

மேலும் இங்கு ஜீவா நினைத்திருந்தால், நான் அந்த முதியவரை மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டேன் என் வேலை முடிந்துவிட்டது, போதும் இப்படியே என் வீட்டில் நான் இருந்துவிடுகிறேன் என்று நினைக்கவில்லை. மாறாக தனது வாகனத்தில் மீண்டும் மருத்துவமனைக்கு சென்று அம்முதியவருக்கு தேவையான உதவியைச் செய்துவிட்டு தனது வீடு திரும்பினார். இத்தகைய மனநிலையைத் தான் நாம் கொண்டு வாழ வேண்டுமென இன்றைய திருவழிபாட்டு வாசகங்கள் நமக்கு படம் பிடித்து காட்டுகின்றன.

**போதும்... இப்படியே...:** செல்வம் இருந்தால் உன்னை உனக்குத் தெரியாது. செல்வம் இல்லாவிட்டால் உன்னை யாருக்கும் தெரியாது. கருவறை முதல் கல்லறை வரை சில்லரை தேவை என்ற நிலை நம் சமுதாயத்தில் படர்ந்து காணப்படுகிறது. பணம் ஒன்று இருந்தால் எல்லாவற்றையும் பெற்றுவிடலாம் என்ற சிந்தனையில் மனுக்குல பயணம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. மனித நேயம் மறைந்து கொண்டிருக்கிறது. எனக்கு எல்லாமே இருக்கிறது. எனக்கு என்ன கவலை? நான் நன்றாக இருக்கிறேன். போதும், நான் இப்படியே இருந்துவிடுகிறேன் என்ற மனநிலையில் வாழாமல், அவற்றையும் ஒருபடி தாண்டி, எனக்கு ஒப்பற்ற செல்வம் கடவுளின் வார்த்தையே. இதற்கு மேலும் நான் திறந்த மனதோடு வாழ்ந்து, எல்லாரையும் ஏற்று அன்பு செய்து, என்னிடம் உள்ளதை பிறரோடு பகிர்ந்து வாழ்வேன் என்ற உறுதியினை பெற்றவர்களாக நாம் வாழ வேண்டும்.

**ஞானம் எனக்கு கொடுக்கப்பட்டது:** நம்மிடம் உள்ள அளவுக்கதிகமான ஆசைகளை ஆரம்பத்திலேயே கிள்ளி எறிந்துவிட வேண்டும் எந்த ஆசைக்குமே தொடக்கத்தில் வலு கிடையாது. அதைப்பற்றி நினைக்க நினைக்கத்தான் அதற்கு வலுஉண்டாகிறது. இளம் தளிராக இருந்த ஆசைகள் காலப்போக்கில் பெரிய மரமாகி விடுகிறது. இறுதியில் அது நிம்மதியில்லா வாழ்வுக்கே அழைத்துச் செல்கிறது. இதனால் உறவுகள் உதாசினப்படுத்தப் படுகிறது. 'நான்' என்று தன்னையே முதன்மைப்படுத்தும் உணர்வுகள், எண்ணங்கள் காலப்போக்கில் திசைமாறி தீய சக்தியாக உருவெடுக்கிறது. இறுதியில் அன்பு, அமைதி, சமாதானம் இழந்து மனிதன் தனி மரமாகிறான். இன்றைய முதல் வாசகம் சாலமோனின் ஞான நூலிலிருந்து எடுக்கப் பட்டுள்ளது. இதன் பின்னணி என்னவென்றால் பழைய ஏற்பாட்டில் சாலமோன் அரசர் தான் மிகவும் புகழ்பெற்ற அரசராய் இருந்தார். இஸ்ராயேல் மக்களை ஆண்டு வந்த காலத்தில் கடவுள் சாலமோன் அரசரிடம், உனக்கு என்ன வரம் வேண்டுமோ கேள் என்றார். அரசர் நினைத்திருந்தால் நான் வாழ்கின்ற இந்த வாழ்க்கையே போதும் இப்படியே இருந்துவிடுகிறேன் என்று கூறியிருக்கலாம் அல்லது பேராசையின் காரணமாக இன்னும் மிகப்பெரிய படைபலம், அழகிய அரண்மனை, செல்வம், அழகை கொடுங்கள் என்று கேட்டிருக்கலாம். மாறாக சாலமோன் அரசர் ஞானத்தைக் கேட்டார். பழைய ஏற்பாட்டில் ஞானம் என்பது கடவுளை குறித்துக்காட்டுகிறது. புதிய ஏற்பாட்டில் இயேசு இறையரசு எனக் குறிப்பிடுகிறார். இவ்வாறு அரசர் கடவுளையே, இறைவனையே கேட்டார். எனவே தான் இன்றைய முதல் வாசகத்தில் நான் மன்றாடினேன், எனக்கு ஞானம் கொடுக்கப் பட்டது என்கிறார் சாலமோன் அரசர்.

**செல்வம் இறையாட்சிக்கு தடை:** பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும் என்பார்கள். இவ்வுலகில் மனிதன் செல்வத்தை நாடி, தேடி, ஓடி அலைகிறான். செல்வம் தான் வாழ்வு கொடுக்கும், உண்மைச் சொத்து என்று எண்ணுகிறான். செல்வம், பணம் தன்னிலே எந்த தவறும் இல்லை. மற்றக் கொடைகளைப் போல் செல்வமும், பணமும் கடவுள் நமக்கு கொடுத்த மாபெரும் கொடைகள் தான். ஆனால் அதனை நாம் எப்படி பயன் படுத்துகிறோம் என்பதுதான் முக்கியமானது. செல்வம், பணத்தை கடவுளுக்கு காணிக்கையாக கொடுக்கிறேனா? பிறரோடு பகிர்ந்து வாழ்கிறேனா? பிறர் மீது அக்கறை கொண்டு வாழ்கிறேனா? பிறரை அடிமைபடுத்துகிறேனா? என்று சுய ஆய்வை மேற்கொள்ள வேண்டும். ஆனால் மனிதன் இவ்வுலகில் பணத்தால், செல்வத் தால் நிழலுக்கு ஆடையும் அணிகலன்களும் அணிவித்து அழகு படுத்தி, நிஜத்தை நிர்வாணப்படுத்திக் கொண்டு இருக்கிறான் என்பதுதான் உண்மை. இன்றைய நற்செய்தியில் ஒருவர் இயேசுவிடம் "போதகரே, நிலைவாழ்வை உரிமையாக்கிக் கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்கிறார். அதற்கு இயேசு, "நீர் உமக்கு உள்ளவற்றை விற்று ஏழைகளுக்கு கொடும்" என்றார். பின்னர் தம் சீடர்களிடம், "செல்வர் இறையாட்சிக்கு உட்படுவது மிகவும் கடினம்" என்கிறார். இதன் மூலம் இயேசு செல்வம், பணம், நிலை வாழ்வுக்கு, இறையாட்சிக்கு, கடவுளை அணுகி செல்வதற்கு எப்பொழுதும் தடை, முட்டுக் கட்டைதான் என்கிறார். எனவே தான் மத்.6:24 ல் "நீங்கள் கடவுளுக்கும், செல்வத்துக்கும் பணிவிடை செய்ய முடியாது" என்று தெளிவாக கூறிவிட்டார். அதுமட்டு மல்லாமல் சபை உரையாளர் 5:10 கூறுகின்றது, "செல்வத்தின் மேல் மிகுந்த ஆசை வைப்பவர் அதனால் பயன் அடையாமல் போகிறார்கள். தீமையைத்தான் அடைவார்கள்."

**இன்னும் ஒன்று குறைபடுகிறது:** இரத்தப்போக்கினால் பனிரெண்டு ஆண்டுகள் துன்பப்பட்டேன். போதும் நாம் இப்படியே வாழ்ந்து இறந்துவிடுகிறேன் என்று நினைத்துக்கொண்டே இருந்திருந்தால் கானானேயப் பெண் குணம் பெற்றிருக்க முடியாது. பன்றிகள் தின்னும் நெற்றை உண்டு நான் இப்படியே வாழ்ந்துவிடுகிறேன் என்று நினைத்திருந்தால் தந்தையின் மன்னிப்பை பெற்று இருக்க மாட்டார் ஊதாரி மைந்தன். சக்கேயு இயேசுவை தேடாவிட்டால் ஆண்டவரே என் உடைமைகளில் பாதியை ஏழைகளுக்கு கொடுத்துவிடுகிறேன் என்று கூறுமளவுக்கு அவருடைய வாழ்க்கை மாறி இருக்காது. இன்றைய நற்செய்தியில் அந்த நபரைப் பார்த்து இயேசு கேட்ட கேள்வி இன்று நம்மைப் பார்த்து கேட்கின்றார். மகனே! மகளே! உனக்கு இன்னும் ஒன்று குறைபடுகிறது. பேஸ்புக், வாட்ஸ்ஆப், இணையதளம் என்று உன் நேரத்தை வீணடித்து, கேளிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து திருப்பலிக்கு செல்லாமல் ஆன்மீக வாழ்க்கையில் வளர்ச்சி அடையாமல், திருவழிபாடுகளில் பங்கேற்காமல் இருக்கிறாயே!!! இந்த உலகில் நீ பிறக்கும் போது எதை கொண்டு வந்தாய்? இவ்வுலகை விட்டு செல்கின்ற போது எதை கொண்டு செல்ல போகிறாய்? கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது, ஆற்றல் வாய்ந்தது அதுதான் உண்மைச் செல்வம். உலகச் செல்வம் போலியானது, தீமையானது. போதும் நான் இப்படியே வாழ்ந்துவிட்டு செல்ல போகிறேன் என்று நினைக்கிறாயா? அல்லது இன்னும் ஒருபடி மேலே சென்று பிறருடைய நல்வாழ்விற் காக என்னையே அர்ப்பணிக்க போகிறேன் என்று கூறப்போகிறாயா?

### ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து செபிக்கிறோம்

கொம்மேடு பங்குதந்தை அருட்திரு. A. ஸ்டீபன் சகாயதாஸ் அவர்களின் அன்னை திருமதி. ரோசலின் மேரி (வயது 61) அவர்கள் உடல் நலக்குறைவினால், கடந்த 25-9-2018 செவ்வாய்க்கிழமை அன்று இறையடி சேர்ந்தார். 26-09-2018 புதன்கிழமை அன்று முற்பகல் 11.00 மணி அளவில் நெய்வேலி நகரியம் புனித காணிக்கை அன்னை பங்கு ஆலயத்தில், அன்னாருடைய அடக்கச் சடங்கு கூட்டுபாடல் திருப்பலி இடம்பெற்றது. அருட்திரு. A. ஸ்டீபன் சகாயதாஸ் தலைமையேற்று நிறைவேற்றிய இத்திருப்பலியில் நமது உயர் மறைமாவட்ட முதன்மை குரு மற்றும் ஐம்பது அருட்தந்தையர்கள் இணைந்து திருப்பலியாற்றினர். அருட்சகோதரிகளும் ஏராளமான இறை மக்களும் இத்திருப்பலியில் பங்கேற்று, இறையடி சேர்ந்த அடியாருக்காக செபித்தனர். நமது உயர் மறைமாவட்ட முதன்மை குரு பேரருட்திரு. ஆ. அருளானந்தம் இரங்கல் செய்தி வழங்கி னார். திருப்பலிக்குப்பின், 5-ஆம் ப்ளாக்கில் அமைந்துள்ள கல்லறையில் அன்னாரது திருவுடல் நல்லடக்கம் நடைபெற்றது. தாயை இழந்து துயருறும் அருட்திரு. A. ஸ்டீபன் சகாயதாஸ் அவர்களுக்கும் அவரது தந்தை, உடன்பிறப்புகள் மற்றும் உறவினர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து செபிக்கி றோம். இறையடி சேர்ந்த திருமதி. ரோசலின் மேரி அவர்களின் ஆன்மா இறைவனில் நித்திய இளைப்பாற்றி அடைவதாக. - ஆசிரியர்.



# அதிகாரம் எங்கிருந்து வருகிறது? 2

Sr.M.லில்லி மரி ME, புதுச்சேரி.

சென்ற இதழ் தொடர்ச்சி...

**3. தீர்ப்பிடல் கூடாது - குற்றங்கடிதல் வேண்டும்:** தீர்ப்பிடுவதற்கும் குற்றத்தைச் சுட்டிக்காட்டுவதற்கும் வேறுபாடு உண்டு. தீர்ப்பிடுவது ஒருவர் செய்த செயலுக்கு உட்கருத்து கொடுப்பது. குற்றங்கடிதல் தவறைத் தவறு என்று துணிவுடன் எடுத்துக் கூறுவது. ஆனால் திருத்துவதையே தலைவரின் பொறுப்பாகக் கணிக்கக் கூடாது. ஏனெனில் தவறு செய்யும் யாரும் (சிறு பிள்ளைகளைத் தவிர) தான் செய்வது தவறு என்று அறிந்துதான் செய்கிறார்கள். எனவே செய்த தவறை நியாயப்படுத்த முடியாது என்பதையும், அதனால் விளைந்த இழப்பையும் சுட்டிக்காட்ட வேண்டும். திருத்தந்தை புனித 23-ஆம் யோவான் கூறுவார்: “நூறு தவறுகளைக் கண்டால் 99 தவறுகளுக்கு உங்கள் கண்களை மூடிக்கொள்ளுங்கள். முக்கியமான ஒன்றைமட்டும் சுட்டிக்காட்டுங்கள்.

**4. விசாரணை செய்தலும் - புரிந்துகொள்ளலும்:** நடந்ததை விசாரிப்பது நல்லது. அது தேவையும் கூட. அடுத்தவர் கூறும் காரணங்களில் உள்ள நியாயத்தைப் புரிந்து கொள்ளலும் அவசியம்.

**5. பொறுப்புணர்வும் - பகிர்ந்துகொள்ளுலும்:** கொடுக்கப் பட்ட பொறுப்பைத் தான்தான் சுமந்தாக வேண்டும். ஆனால் அவற்றை மற்றவர்களோடும் பகிர்ந்துகொள்ள வேண்டும். மோசே தன் பொறுப்பை ஆரோனுடன் பகிர்ந்துகொண்டார்.

**இறைவன் தேர்ந்துகொள்ளும் முறை:** மனிதர்கள், விலங்குகள் தங்கள் தலைவர்களைத் தேர்ந்துகொள்ளும் முறையை சென்ற வாரம் பார்த்தோம். ஆனால் இறைவன் தன் மக்களை ஆள எப்படி தேர்ந்தெடுக்கிறார்?

இஸ்ராயேல் மக்களுக்கு அரசர்கள் இருந்ததில்லை. ஏனெனில் கடவுளே அவர்களுடைய அரசராக இருந்தார். ஆனால் வேற்று நாட்டினர் அவர்களோடு போர் புரிந்து துன்புறுத்தியதால் தங்களைப் பாதுகாக்க தங்களுக்கும் ஓர் அரசன் வேண்டும் என்று சாமுவேலிடம் சென்று கேட்டனர். அவர் கடவுளைக் கலந்தாலோசித்துக் கூறினார் கடவுளுக்கு அவர்களுடைய வேண்டுகோளை ஏற்க விருப்பமில்லை என்று. அவர்களுக்கு ஓர் அரசன் இருந்தால் எப்படி மக்களைத் துன்புறுத்தித் தனக்குப் பணிவிடை செய்ய வைத்துக்கொள்வான் என்று விளக்கிச் சொன்னார். ஆனால் அவர்கள் விடாப்பிடியாகத் தங்களுக்கு ஓர் அரசன் வேண்டும் என்று கேட்டனர். கடவுளும் அவர்களுடைய விருப்பத்திற்கு இணங்கி சாமுவேல் மூலமாக சவுலை ஓர் அரசனாகத் தேர்ந்தெடுத்தார். விவிலியம் கூறுகிறது: அவர் மற்ற எல்லோரையும் விட உயரமாகவும் சிவந்த மேனியும் அழகும் உடையவராக இருந்தார். இவைதான் தலைமைப் பண்புக்கு ஏற்ற குணமா? ஒரு வேளை விடாப்பிடியாக அரசர் வேண்டும் எனக் கேட்கும் மக்களுக்கு இப்படி ஒருவரைத் தந்தால் திருப்தி அடைவார்கள் என்று செய்திருக்கலாம்.

பின்னர் சவுலைத் தள்ளிவிட்டு தாவீதைத் தேர்ந்தெடுத் தார். இவரிடமும் உள்ள உடலழகு குறிப்பிடப்படுகிறது. ஆனால் அதே பகுதியில் “மனிதன்



வெளித் தோற்றத்தைப் பார்க்கிறான் கடவுளோ உள்ளத்தைப் பார்க்கிறார்” என்று சொல்லப்பட்டுள்ளது. ஒரு வேளை தாவீதுக்கு உள்ளழகும் புற அழகும் இருந்திருக்கலாம்.

பின்னர் மோசேயைத் தேர்ந்து கொண்டார். அவரிடம் பெரும் பணியை ஒப்படைக்கிறார். மோசேயோ பேச்சாற்றல் அற்றவர். திக்குவாயர். கடவுள் ஒருவருடைய தகுதியைப் பார்த்துத் தேர்ந்தெடுப்பதில்லை. ஆனால் தேர்ந்துகொண்டு அவர்களைத் தகுதியுடையவர் ஆக்குகிறார். பல புதுமைகளை மோசேயின் கைகளால் செய்வித்த கடவுள் அவருடைய பேச்சுக் குறையைப் போக்கியிருக்கலாம் அல்லவா? இல்லை ஆரோனின் துணையைக் கொண்டு அந்த குறையை நிறைவு செய்கிறார்.

எனவே தலைமைப் பொறுப்புக்குத் தேர்ந்து கொள்ளப்படுபவர்கள் எல்லாப் பண்புகளையும் எல்லாத் திறமைகளையும் கொண்டிருக்க வேண்டும் என்று தேவையில்லை. ஆனால் மற்றவர்களின் திறன்களைப் பயன்படுத்திக்கொள்ளும் அளவு தாழ்ச்சி உள்ளவர்களாக இருந்தால் போதும். கடவுளே மோசேயின் தாழ்ச்சிக்குச் சான்று பகர்கிறார்: “பூவுலகின் அனைத்து மாந்தரிலும் மோசே சாந்த மிகு மானிடராய்த் திகழ்ந்தார்.” (எண். 12:3). ஒரு நிறுவனத்தையோ ஒரு சபையையோ நடத்த எல்லாத் திறமைகளையும் ஒருவரிடமே கடவுள் தருவதில்லை. மாறாக சபையில் உள்ள பலருக்கும் அதைப் பகிர்ந்தளிக்கிறார். அதிகாரம் பற்றிய கருத்து பழைய ஏற்பாட்டில் அவ்வளவாகக் காணப்படவில்லை. ஆனால் புதிய ஏற்பாட்டில் அது பற்றி அதிகம் பேசப்படுகிறது.

**அதிகாரம் என்றால் என்ன?** அதிகாரம் என்பது தடையின்றி ஒரு முடிவு எடுக்கவோ செயல்படவோ கொடுக்கப்படும் உரிமை. ஆனால் மற்றவர்களை அடக்கி ஆளவோ அவர்களுடைய உரிமைகளைப் பறிக்கவோ அல்ல.

இந்த அதிகாரத்தைக் கொடுப்பது யார்? அதிகாரம் எங்கிருந்து வருகிறது? சரியான அதிகாரம் கடவுளிடமிருந்து வருகிறது. அதை எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்த அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு உரிமை இல்லை. இயேசு தன்னுடைய தீர்ப்பைப் பெற பிலாத்து முன்னால் நிற்கிறார். அப்போது பிலாத்து இயேசுவிடம் “உன்னை விடுவிக்கவும் சிலுவையில் அறையவும் எனக்கு அதிகாரம் உண்டு” என்றார். அதற்கு இயேசு **“மேலிருந்து அருளப்படாவிட்டால் உமக்கு என் மேல் எந்த அதிகாரமும் இராது”** என்றார். (யோவா 19:11)

இவ்வுலக ஆட்சி முறைகளில் அதிகாரம் கீழிருந்து வருகிறது. அதாவது மக்களின் வாக்களிப்பின் மூலம் ஒருவர் தலைவராகிறார். அல்லது முற்காலத்தில் சீட்டுக் குலுக்கிப் போட்டு ஒருவரைத் தேர்ந்தெடுத்தனர். அப்படியானால் அதிகாரம் மனிதர் கைகளில் கொடுக்கப்பட்டுவிட்டதா? மனிதர் கைகளில் அது ஒப்படைக்கப்பட்டாலும் கடவுளே செயல்படுகிறார். சில தேர்தல் முடிவுகளைப் பார்க்கும்போது கடவுள் செயல்படுகிறாரா என்னும் கேள்வி எழுகிறது. அந்த வேளைகளில் கடவுளுக்குச் செயல்படவும் செயல்படாமல் இருக்கவும் உரிமை உண்டு என்று இறைச் சித்தத்துக்கு அடிபணிய வேண்டும். - தொடரும்



# மறைமாநில மாமன்றம் மலர்க
# இறையாட்சி வாழ்வு

– சுவாமி ஆ. லூயிஸ்.

கடவுள்தான் நமது வாழ்வின் தொடக்கமும் முடிவும் நடுவுமாக இருக்கிறார் என்ற உணர்வே நம் அனைவரையும் இறையாட்சி வாழ்வில் வாழ வைத்துக் கொண்டு வருகிறது என்று பெருமிதம் கொள்வோம். படைப்பும் மனிதமும் இறையாட்சி வாழ்வில் இருப்பதை பல்வேறு வடிவங்களில் நிலைகளில் நாம் அனுபவித்து வருகிறோம். இறைவனில் இருப்பது, இயங்குவது, இணைவது நமது நோக்கமாக இருப்பது முறையானது. பன்முக வாழ்வு, பல்சமய வாழ்வு அனைத்தும் இறையாட்சி வாழ்வில் சங்கமம் ஆவது நியதியாகும்.

**இறை நம்பிக்கை:** பொதுவாக காலகாலமாக மனித குலம் கடவுளை பல்வேறு விதங்களில் நம்பி வருகிறது. கடவுளை நம்பாதவர்கள் இல்லை என்றே கூற முடியும். கடவுளை மறுக்கின்றவர் இல்லை என்றே கூற முடியும். கடவுளை மறுக்கின்றவர்களை நாம் சரியாக, ஆழமாக புரிந்துகொண்டால் அவர்களும் கடவுளை வேறு நிலைகளில் ஏற்பவர்களாக இருக்கின்றனர் என்று உணர இயலும். கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

கடவுள் அருளும் மனித அறிவின் விளையாட்டுகள் பல்வேறு வடிவங்களை வெளிப்படுத்துகின்றது. அறிவின் முடிவுகள் இறுதி முடிவிற்குப் படிகள் என்பதால், அறிவின் ஆற்றலை இறுதியாக எண்ணிவிடவேண்டாம். அறிவைக் கடந்த ஆற்றல், அறிவை இயக்கும் ஆற்றல் கடவுள் நம்பிக்கையின் ஆதாரமாக அமைகிறது. வாழ்வின் புதிர்களை அவ்வளவு எளிதில் நாம் கண்டு உணர இயலாது. இவ்வாறு கடவுள் நம்பிக்கை நம் அனைவர் மத்தியிலும் உண்டு என்பதை ஏற்பது விவேகமாகும். அவன் இன்றி அணுவும் அசையாது என்பதை ஞானத்தோடு புரிந்து ஏற்றுக் கொள்வோம்.

**நம்மில் இறையாட்சி:** அனைத்து சமயங்களைச் சார்ந்தவர்கள், சாராதவர்கள் மனதில் கடவுள் இருக்கின்றார். இதை உணர்பவர்கள் உள்ளத்தில் இறையாட்சிஅகமும் புறமும் இடம்பெறுகின்றது. அறியாமையினாலும், நம்பிக்கையின் தரம் குறைவதாலும், வாழ்வின் தோல்விகளின் விளைவாகவும் கடவுள் தங்களுக்குள் இருப்பினும், இதை ஏற்பதற்குச் சில சங்கடங்கள் இடம்பெற வாய்ப்புண்டு. தற்காலிகமாக இறையாட்சியை ஏற்க தடைகள் இருப்பினும், நிரந்தரமாக இறையாட்சியை மறுக்க மனம் கொடுக்காது என்பது உறுதியாகும்.

இறையாட்சியை பல்வேறு முறைகளில் வாழ வழி உண்டு. மனசாட்சி, தர்மம், ஒழுங்கு, கற்பனை, கட்டளை, மரபு, பழக்க வழக்கங்கள், முன்னோர் அனுபவம், வெளிப்பாடு, அவதாரம் என பல்வேறு நிலைகளில் இறையாட்சியின் பன்முகங்களை நாம் பரந்த, திறந்த மனதுடன் ஏற்பது நல்லது. அடிப்படை வாதத்தில் சுவடுகளைப் பதியச் செய்தால் பிளவுகள், போர்கள் ஓயாது. இவைகளைத்தான் அனைத்து சமயங்களிலும் ஒருசில விழுக்காடு மக்கள் வழக்காடுவதைக் கண்டு அவர்களும் உணர நாம் வேண்டுவது நல்லதாகும். பிளவுக்கும் பூசலுக்கும் இடம் கொடுத்தால் அலகை நம்மை ஆட்கொள்ளும். உறவுக்கும் தோழமைக்கும் இடம் தந்தால் தூய ஆவி நம்மை வழிநடத்தும். மக்களினம் முழுவதும் இறையாட்சிக்கு ஒத்துழைத்தால், இவ்வுலக வாழ்வு வளமாக, நலமாக எல்லார்க்கும் அமையும் என மகிழ்வோம்.

**இந்திய இறையாட்சி:** நமது நாட்டில் பலமொழிகள், பண்பாடுகள், இனங்கள், கொள்கைகள், கலாச்சாரங்கள், சமயங்கள் இருப்பதை உணர்ந்து பெரும்பாலும் ஒற்றுமையாக வாழ்ந்து வருவதற்கு நமது முன்னோர்களும், இன்று இருப்பவர்களும் கடவுள் உணர்வு, அனுபவம், தாகம் பெற்றவர்கள் என்பதை மறுக்க முடியாது. இறை உணர்வு இந்தியர்களின் இதயங்களில் காலாகாலமாக வளர்ந்து வருவது பெருமைக்குரியதாகும். இன்றைய சூழ்நிலையில் பல சோதனைகள் இருப்பினும் நமது உண்மையான இறை உணர்வு என்ற மரபை மறந்துவிடக் கூடாது. இந்தியாவின் பல மாநிலங்களையும் வழிநடத்தும் அரசியல்வாதிகள் கடவுள் பற்றுதலோடும், சமதர்மத்தோடும் நாட்டை அறிவியலில் மட்டுமல்ல, அனைத்திற்கும் அடித்தளமான ஆன்மீகத்திலும் வழிநடத்துவது தேவைப்படுகிறது. கட்சிகள் வேறு படலாம், ஆட்சியாளர்கள் மாறலாம் ஆனால் இயல்பான இறை உணர்வை யாரும் இழந்துவிடக்கூடாது. அடிப்படைவாத உணர்வுகட்கு என்றும் இந்தியாவில் இடமில்லை என்பதை அனைவரும் தெளிவாகத் தெரிந்து கொண்டு, இடம் கொடுக்காது கவனமாய் விழிப்போடு இருப்பது காலத்தின் கட்டாயமாகும். மறைமுகமாகவும், நேர்முகமாகவும் கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள், ஏனைய சிறுபான்மையினர் அனைவரையும் மதிக்கும் மரபுக்கு விதிவிலக்கு இல்லை என்பதை அடிப்படைவாதிகள் அறிந்துகொண்டு, மக்களைத் திசைத் திருப்பாமல் நீதியின் பாதையில் வழிநடத்திச் செல்வது தர்மமாகும்.

**கருவிகள் - கர்த்தர்:** கடவுள் ஒருவர்தான் சமயங்கள் பலவாக இருக்கலாம். எல்லாரையும் வழிநடத்துகின்றவர் கடவுள் ஒருவரே. இந்த ஒருவரில் இந்தியர்கள் இணைந்திருந்தால் தொல்லைகட்கு இடமில்லை. கருவிகள் பலவாகத்தான் இருக்க இயலும், ஒரே கருவியாக்க யாரும் முயல்வது முறையற்றதாகும். நம் எல்லாரிடத்திலும் சுயநலம் தனியாகவும் குழுவாகவும் கடவுள் என்ற பெயரில் நடிப்பதற்கு இடமுண்டு என்பதால் எல்லாரும் தெளிவாகத் தேர்ந்து தெளிவு பெற்று நல்லதைப் பற்றிக்கொண்டு அல்லதை அகற்றி அனைவரும் பன்முகத்தில் அவரின் முகத்தை தரிசித்தால் கவலை இல்லை. ஆட்டுத்தோலைப் போர்த்திக்கொண்டு ஓநாய்களைப் போல பலர் வருவர் என்பது அருள்வாக்கு. சிலர் சில சமயம் காவியைப் போர்த்திக்கொண்டு கடவுளை கரையில் விட்டுவிட்டு, அரசியலில் பங்கெடுப்பது, ஒத்து ஊதுவது, ஆதரிப்பது என்பதை எல்லாரும் கவனமாக கவனிக்கவேண்டும். சாதாரண மக்களை யாரும் கடவுள் பெயரைப் பயன்படுத்தி ஏமாற்றுவது உகந்ததல்ல. ஏனெனில் கடவுள் ஒருபோதும் அவ்வாறு செய்யமாட்டார். கடவுள் இரக்கமும் கருணையும் மிகுந்தவர், ஒருவர் கூட அழிய வேண்டும் என்பது அவருடைய திருவுளம் அல்ல என்பதில் தீர்க்கமான முடிவிருப்பது நன்மைபயக்கும். கானல் நீர் போன்ற வாழ்வை சோலைவனமாக வாழ்வதில்தான் நமக்குப் பெருமை உண்டு, பேரின்பம் உண்டு. கல்விக் கூட பிள்ளைகளைப் போல "இந்தியா எனது தாய் நாடு" என்று தினம் உறுதி மொழி எடுத்து நாட்டையும் வீட்டையும், தனி ஒருவரையும், குழுவையும் மூவொரு கடவுளைப் போல சத்சித் ஆனந்தம் என அனைவரும் வாழ்வோம் வாழ வைப்போம். ●

**வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு :** சர்வவியாபி இதழில் மரித்தோர் நினைவு செபம் பதிவு செய்ய விரும்புவோர் குறைந்தது பத்து நாட்களுக்கு முன்பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம்.

**2018-2019** சர்வவியாபி சந்தாவை புதுப்பித்துக் கொள்ளவும். MO செய்பவர்கள் **சந்தா எண்ணை** தவறாமல் குறிப்பிடவும். - ஆசிரியர்.



## இளையோரை... இறையாட்சிக்கு ஆற்றுப் படுத்துவோம்!! (கல்வி)

- வெட்டிவயல் வளவன்.

**கல்விப் பணி:** "திருச்சபையில் உள்ள இளைஞர், இளம் பெண்களை நினைத்துப் பார்க்கிறேன். இவர்களும், சில கருத்துக்களை விடாப்படியாகப் பிடித்துக் கொண்டு உள்ளனர். சிலர் நேர்மையாளர். நல்லவர்கள். இவர்கள் தாழ்ச்சி சாந்தத்தில் வளர்ச்சிபெற மன்றாட வேண்டும். கிறித்தவர்கள் இளையோரை மரியாதையாக நடத்தவும், பேசவும் வேண்டும்" என்று கூறும் நம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் உள்ளார்ந்த கருத்து (ஜூன் 2017 அன்னை வேளாங்கண்ணி). நல்ல கல்வி படிப்பு (பிளை) மூலம்தான், வழிநடத்தப்பட வேண்டும் என்பதே பொருள்.

**"அடுத்தவர் மீது அன்புகூர்தல் என்பது நற்செய்தியின் கோட்பாடு":** பன்னாட்டு உறவில் மனிதாபிமானக் கோட் பாடாகவும், தூதரக உறவில், பன்னாட்டு உறவில், அன்பு கூர்வதற்காகவும் திறமை வேண்டி அவர்கள் (இளைஞர்கள்) உருவாக்கப்படவேண்டும்." (அக்.2017 - அ.வே). இறையாட்சி எப்போது வரும் என்ற கேள்விக்கு, மாணவச் சீடர்கள், யோவான், பரிசேயர்க்கு குரு (ராபி-போதகர்) யேசு பதில் சொல்கிறார். "இறையாட்சி உங்கள் நடுவே உள்ளது. இது நாசரேத் தொழு கூடத்தில் நடந்தது என்றார். **கற்றலும் கற்பித்தலும் அன்றே தொடங்கிவிட்டது.**

"இளையோரே! எங்கு ஆண்டவர் உங்களை நட்டுவைத்து உள்ளாரோ அங்கு உறுதியுடன் நில்லுங்கள், மனந்தளர வேண்டாம். கடவுளின் தந்தைக்குரிய அக்கறையிலும், இயேசுவின் அன்பிலும், அனைத்தும் மாற்றிப் புதுப்பிக்கும். ஆவியின் வல்லமையிலும், நம்பிக்கை வையுங்கள். கடவுளின் கொடையான மனதையும், இதயத்தையும், பயன் படுத்தி, மனித குடும்பம், உரிமை, நீதி, மாண்பில் வளர உதவுங்கள். பாவம், வெறுப்புணர்வு, பிரிவினையில், காயப் பட்டுள்ள உலகத்துக்கு, அவரின் அன்னையின் இரக்கத் தைக் கொண்டு செல்லுங்கள்" என்று கூறும் நம் புரட்சி பேராளர் போதகரும் மாபெரும் அசான் திருத்தந்தையின் கற்பித்தல் - நாம் பெற வேண்டிய நற்செய்தி விழுமியக் கல்வி தானே (அன்னை வே.அக்.17).

"இளையோரே! பொய் வாக்குறுதியால் (எ.கா: இளைஞர்களே! எதிர்காலம் உங்கள் கையில், நிகழ்காலம் எங்கள் கையில் சுருட்டிக்கொள்ள) நீங்கள் மாற்றப்பட அனுமதியாதீர். பொய்யான விடுதலையில், ஏமாற்றப்படுகிற, விரும்பாத, இறை உணர்வு உயர்வு, ஒருகொள்கை நோக்கிய, பார்வையை பலர் தங்களைக் கொண்டவர்களாக உள்ளனர். சமூக மாற்று உருவாக்கத்துக்கு ஆன முன்னோடி களாக செயல்பட வேண்டும். மேலும் நல்ல உலகத்தை (மக்களை) கட்டி எழுப்புவதில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். இந்த சவால ஏற்றுக் கொள்கிறீர்களா?" என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கேள்வி கேட்டு, உங்களை எழுப்பி உள்ளார். இளையோர்கள் அவர்தம் அழைப்புக்கு ஏற்ற வகையில், முக்கிய செயல்பாட்டுக்கு, தாராள மனத்துடன், பதில் கூறவும், செபிக்குமாறு உம்மை அழைப்பது போதித்தல் தவிர வேறு என்ன? (16-4-17 நம்வாழ்வு).

கடல் மீது நடந்து வருகிறார் இயேசு. ஆண்டவரே! எம்மைக் காப்பாற்றும் கதறுகிறார் பேதுரு. இந்த நிகழ்வு, இறை மனித உறவின் ஆழத்தையும், மனித துன்பத்தையும் துன்ப வேளையில் இறைவார்த்தையை கற்று ஏற்று, இறுகப் பற்றிக் கொள்ள உதவும் என்று காட்டுகிறது. திருச்சபை ஒரு படகு மாதிரி. அதில் பயணம் செய்யும் பயணிகள் நாம் நம் திறமை, ஊக்கத்தைவிட, மேலாக, யேசுவிடம் நாம் கொள் கின்ற நம்பிக்கையும் வார்த்தைகளும்தான். திருச்சபையை நிலை குழையாது காப்பது நம் கடமை. அதை மேற்கொள்ள நாம் பெறவேண்டிய பாடங்கள், அறிவுத் தெளிவுகள், வாழ்வில், சமூகத்தில், தனி மனித வாழ்வில் ஒழுக்கத்தில் பண்பாட்டின் ஒழுகலாற்றில், பயணத்தில், மறைப்பணி வாழ்வு, கல்வி முறையில் எனப்பல வழிமுறைகள் உள்ளன. இதுதான் கிறித்துவ இளைஞர் குழாம் (பிறரும்) ஏற்க வேண்டிய கல்வி - கற்றல் - கற்பித்தல் ஆகும்.

நற்செய்தியில் மூன்று சிந்தாந்தம், கல்வி மூலம் தேடலை வாசிக்கிறோம். 1) தட்டுங்கள் திறக்கப்படும். 2) கேளுங்கள் கொடுக்கப்படும். 3) தேடுங்கள் கண்டு அடைவீர், இஃது இன்றைய இளையோர்க்கு நம்பிக்கை ஊட்டும் கல்வி "வித்துக்கள்" என்போம். இதன் சுருக்கமான கருத்து: பிறந்த குழந்தை அழுதால், ஒன்றின் தேடல் என்றுதானே பொருள். (பாலுக்காக.) ஆம்! இவ்வுலகு அனைத்து வாழ்க்கைக்கும் "கல்வி" என்ற தேடல் விதைகள்தான் அவை என்பதை நீங்கள் உணர்ந்து கொண்டால் போதும். ●

96 இளம் உள்ளங்களுக்கு

## மன்னிப்பின் மகிமை



– B.மேரி ராபர்ட் சாந்திதாஸ், புதுவை–1.

**பொறுத்தாரின் பெருமை:** ஒறுத்தார்க்கு ஒரு நாளை இன்பம் பொறுத்தார்க்குப் பொன்றுந் துணையும் புகழ். (குறள் 156)

தீங்கு செய்தவர்களைத் தண்டித்தவர்களுக்கு அன்று ஒரு நாளைக்கே இன்பம். ஆனால் பொறுத்தவர்க்கோ உலகம் அழியும் வரை புகழ் உண்டு.

மன்னிப்பு என்பது துணிவு கொண்டவர்களின் அவசியமான அணிகலன் ஆகும். ஏனெனில், மன்னிப்பின் மூலம் இவர்கள் முன்னால் விரோதிகளின் அன்பை பெறுவதால் நிம்மதியான, மகிழ்ச்சியான, அமைதியான வாழ்க்கை வாழ இது முதல் படியாக அமையும்.

**சினாவின் கொலை முயற்சி:** ரோமாபுரியை ஆண்ட ஜூலியஸ் சீசரை, அவன் நண்பன் புரூட்டஸ் நயவஞ்சக சூழ்ச்சியின் மூலம் கொலை செய்தான். ஆனால் அதற்கு முன்பாகவும் பல கொலை முயற்சிகள் நடந்தன. அதில் சீசரின் ஆட்சிமன்ற உறுப்பினர் சினா (Cina) வின் கொலை முயற்சி குறிப்பிடத்தக்கது. ஆனால் அசம்பாவிதம் எதுவும் நடப்பதற்கு முன்பாகவே சினா பிடிப்பட்டுவிட்டான். சினாவுக்கு எத்தகைய தண்டனை கொடுத்தால் வேறு எவரும் இத்தகைய முயற்சியில் ஈடுபட அஞ்சுவார்கள் என்று சீசர் தீவிரமாக யோசிக்கலானான்.

**சீசர் மனைவி தந்த ஆலோசனை:** சீசரின் மனைவி, "சீசர், எதைப் பற்றி இவ்வளவு தீவிரமாக யோசித்துக் கொண்டிருக்கிறீர்கள்?"

**சீசர்:** "என்னை கொல்ல இன்னொரு முயற்சி நடந்துள்ளது. அதில் சினா மிக முக்கிய குற்றவாளியாக பிடிப்பட்டுள்ளான். சினா இந்த சதித்திட்டத்தில் மூளையாக செயல்பட்டது மிகுந்த வருத்தமளிக்கிறது. அவனை நான் அவ்வளவு எளிதில் விட்டுவிடப் போவதில்லை."

**சீசரின் மனைவி:** "உண்மையிலேயே இது மிகுந்த அதிர்ச்சி அளிக்கிறது. ஆனாலும் சினாவுக்கு தண்டனை கொடுப்பதன் மூலம் இத்தகைய செயல்கள் முடிவுக்கு வரும் என்றா நினைக்கிறீர்கள்?"

**சீசர்:** "நீ சொல்ல வந்ததை சொல், இதுபற்றி யோசிக்கலாம்."

**சீசரின் மனைவி:** "அவனை மன்னித்து விட்டுவிடுங்கள் சீசர்! இந்த புதிய முறையை கையாண்டு பார்க்கலாமே."

**மனிதனை மாற்றிய மன்னிப்பு:** சீசர் சினாவை எந்த நிபந்தனையுமன்றி மன்னித்து விடுதலை செய்தான். விளைவு, சினா மற்ற எல்லோரையும்விட சீசருக்கு மிகவும் விசுவாசம் உள்ள நண்பனாக மாறினான். மன்னிப்பு சினாவை மாற்றிவிட்டது.

**சிந்திக்க:** "எங்களுக்கு எதிராக குற்றம் புரிந்தோரை நாங்கள் மன்னிப்பதுபோல எங்கள் குற்றங்களை மன்னியும்."

## தூய பேதுரு விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி-178
### ஜூன் மாத போட்டியின் முடிவுகள்

***விவிலிய பகுதி: திருத்தூதர் பணி***

**குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் 10 பேர்.**

1) M. சின்னப்பன் Rtd.JE. -உழவர்கரை. 2) A. டெய்சி அமல்ராஜ் - அமிந்தகரை, 3) A. அருமைராஜ் - காந்திகிராமம், 4) பிலோமினா சந்தியாகு - புதுவிளாங்குடி, 5) A. ஹெலன் வின்சென்ட் - அவிநாசி. 6) Y.மரிய மைக்கிள் ஜாக்சன்-அழகப்பபுரம். 7) S.B.தெரசா ரீத்தா பெஞ்சமின்- C. நம்மியந்தல், 8) Sr. செசீலி-திண்டுக்கல், 9) த.பா.ஆன்சலீன்-அருவங்காடு, 10) J.K. மரியதாஸ் - கோவை.

***சரியான பதில்கள்:*** 1கொரியந்தியர் திருமுகம்

**இடமிருந்து வலம்**

1. வகையிலும் (1கொரி.1:5)
3. அக்கோவில் (1கொரி.3:17)
10. உடலாய் (1கொரி.15:44)
11. இயலும் (1கொரி.14:31)
12. மடமை (1கொரி.1:25)
18. இது (1கொரி.7:10,11)

**மேலிருந்து கீழ்**

1. வலுவின்மை (1கொரி.1:25)
2. உண்ணும் (1கொரி.8:8)
5. வஞ்சித்து (1கொரி.6:8)
11. இருந்தேன் (1கொரி.2:3)
16. கடவுள் (1கொரி.6:14)
18. இப்படிச் (1கொரி.11:32)

**வலமிருந்து இடம்**

1. வல்லமை (1கொரி.1:18)
6. காலம் (1கொரி.7:5)
7. பிள்ளைகள் (1கொரி.7:14)
8. கடவுளே (1கொரி.15:28)
10. உடல் (1கொரி.12:14)
13. பொருள் (1கொரி.14:10)
14. வான (1கொரி.6:3)
17. பாவம் (1கொரி.618)
19. தூய ஆவி (1கொரி.6:19)
21. பெண் (1கொரி.11:12)

**கீழிருந்து மேல்**

2. உள்ளமும் (1கொரி.2:9)
3. அடிமையாகி (1கொரி.6:12)
4. கிறிஸ்து (1கொரி.3:23)
7. பிள்ளை (1கொரி.14:20
8. கடவுள் (1கொரி.1:9)
9. கிறிஸ்துவை (1கொரி.1:12)
10. உண்மையில் (1கொரி.15:10)
14. வாழ (1கொரி.7:10,11)
15. நல்லது (1கொரி.9:15)
20. கொள்ள (1கொரி.10:22)

**பாராட்டும், இறை ஆசீரும் பெறுபவர்கள்:** R.கிரேஸி ராபின், S.கமலம்–திருச்சி, Sr. மௌரீன் மேரி – தொண்டமானத்தம்,, M.ஜெயராஜ்–பசுபதிபாளையம், A. அருமைராஜ்–காந்தி கிராமம், A. அருள்மேரி Tr, I. லீமா ஜெயசீலன்–செல்வபுரம், எமிலி பீட்டர்–தொண்டாமுத்தூர், S. ஹென்றிதாஸ்–வடக்குத்து, Sr. ஆரோன் மரியசூசை–கரையான்புத்தூர், Sr.மேரி புஷ்பம்–சீவாடி, R.அற்புதசாமி Rtd.Tr, A. ஆரோக்கியமேரி Tr,–சோமனூர், A.லில்லி ஜாக்குலீன்–கீழ்ப்பெரும்பாக்கம், A.ஜெசிந்தா அமல்ராஜ் Rtd. Tr, – தாராபுரம், N.ஜோஸ்பீன் வசந்தி, R.C.ரிச்சர்டு பிரிட்டோ, J.ராஜபாக்கியம், பிலோமினா சத்தியநாதன்–தேனி, S. தனசீலி, A. மரியப்பன் Rt.Tr, –விரியூர், பிலோமினா சந்தியாகு – புதுவிளாங்குடி, A. கிளாரா, I. இந்திரா–காளையார்கோவில், S. அமலி Tr – இராயப்பன்பட்டி, S.A. ரீத்து–கூத்தலூர், A. ஹெலன் வின்சென்ட்–அவிநாசி, ரோசாலி நீதிதாஸ் – நெடுங்காடு, A. அன்னம்மாள், P.ஞானசெல்வி, A. ஆனி பிரபா, A. சகாய எல்ஸி, Y. மரிய மைக்கிள் ஜாக்சன், M.ஜூலியட் மேரி – அழகப்பபுரம், Sr.M. மேரி வயோலா–அலமேலுபுரம் பூண்டி, Sr. எலிசாமேரி – காக்கயந்தோப்பு, Sr. ஹைய்சிந்–சாந்தோம், M.மதலை இருதயமேரி, M.மோட்சமேரி Rtd.Tr, S. செல்வி எமல்டாமேரி–சேலம் கேம்ப், L. ஆரோக்கியமேரி–பள்ளபாளையம், Sr. ஜேம்ஸ்மேரி–இடையார்பாளையம், S. புஷ்பமேரி, Sr. சகாயமேரி–கடலூர், N.P.ஆரோக்கியமேரி, Y.A.லில்லி, K.L. இஸபெல்லா லூர்துராஜன், S.B. தெரசா ரீத்தா பெஞ்சமின்–C.நம்மியந்தல், S. சவரிமுத்து Rtd. M.T., A. செல்வராஜ் சுசீலா – சாத்திப்பட்டு, J. சூசைமேரி, Z. எலிசபெத் சக்கரையாஸ், A. ஸ்டெல்லாமேரி – கோவிலானூர், Sr. மேரி பெஞ்சமின்–மாதாக்கோட்டை, ஷீலா விக்டர், S. ஆனிசுசான் சாந்தி, A.கரோலீன் மேரி, D. உபகாரமேரி, A. ஆரோக்கியசாமி–புதுவை, விவியான் இருதயராஜ், கிரிஜா புரோஸ்பர், ரெஜினா ராபின், J.ஹென்றி–வெலிங்டன், J. ரெபேக்காள் அன்னபாக்கியம் – முத்தையாபுரம், Sr. விரோணிக்கம்–கிருஷ்ணாபுரம், A.மரிய கிறிஸ்துராஜ் Rtd.H.M, R. லூக்காஸ், L. லிட்டில் ப்ளவர், A. உபகாரசாமி Rtd. Tr – விழுப்புரம், B. மரிதெரஸ், ஜோஸ்பீன் வர்க்கீஸ் – ரெட்டியார்பாளையம், R. உத்திரியமேரி Rtd.Tr – வடக்குச் செய்யூர், S. சூசை அருள்– K.புதூர், D.சூசைமாணிக்கம், D. பெலிக்ஸ் ஜோஸ்பீன்–காந்திபுரம் டல்சி D.குருஸ், Sr. யூக்கரிஸ்டா, D. ரெஜினாமேரி–போத்தனூர், S.L.மரியதாஸ், நிர்மலா – நெய்வேலி, டெய்ஸி அமல்ராஜ் – அமிர்ந்தகரை, Sr. மரியபுஷ்பம், Sr.L. ரெஜினாமேரி–புறத்தாக்குடி, G. அலெக்ஸாண்டர் – வில்லியனூர், S. பால்ராஜ்–மேட்டுப்பாளையம், D. பெலிஸ்க் அகஸ்டஸ், Sr. மேரி லிடியா, A. விக்டோரியா, ஜோஸ்பீன் மரியதாஸ்–கோவை,Sr. மேரி ஸ்டெல்லா, Sr. மரி கபிரியேல் – கும்பகோணம், Sr. ப்ளோரட்மேரி, A. ஆரோக்கியசாமி–உளுந்தூர்பேட்டை, Sr.சின்னராணி–அணிலாடி, F. கிளாராமேரி Tr, J. பிலிப் பீட்டர் ஜான்மலையப்பா–வன்னியர்பாளையம், Sr. ஜோவித்தாமேரி–புதுப்பாளையம், R. மிக்கேல்சாமி Rtd.Tr – இராமநாதபுரம், Sr. செசீலி, M.சிறியபுஷ்பம் Tr–திண்டுக்கல், அன்னமேரி சாமுவேல் – சரவணம்பட்டி, A. அல்போன்சாமேரி Rtd.Tr, S. சந்தியாகு Rtd.H.M. – நாரணம்பாளையம், பெரியநாயகம், ஸ்தனிஸ்–அணையேரி சத்தியநாதன் ஜூலியட் – காரைக்கால், P. மரிய சகாய செபஸ்டின் – போளூர், Sr. மேரி லிடியா – அழகாபுரம், V. இருதயசாமி–ஒண்டிப்புதூர், Sr.லாரன்ஸ் செல்வநாதன், Sr. செலீன் இராயப்பன்–திண்டிவனம், I.R. எட்மெண்ட்–காளையார்கோவில், S.அப்போலினியஸ்–தக்கலை, த.பா. ஆன்சலீன்–அருவங்காடு, A.ஜோசப்–பெங்களூர், S. ரோசாலி மேரி Tr, S. அமல்ராஜ்–வடலூர், S.G.ஜோசப்ராஜமாணிக்கம், M.செபாஸ்டியன் – மதுரை, A. அருள்பாய்விக்டர்–கோட்டார், M.சின்னப்பன்–உழவர்கரை, மார்கிரேட்மேரி–வளையன்காடு, P.ஜோதி அல்போன்சா–போத்தனூர், P. விஜயக்குமார்–லாஸ்பேட்டை, இருதய விஜிலா Tr, பாலகிருஷ்ணபுரம், C. கஸ்பார் Rtd. H.M.–இளையாங்கண்ணி, C. மேரி ஜோஸ்–பெரியகொடிவேரி, Sr. ஜூலி எலிசபெத்–மாதாக்கோட்டை, சேசுமணி மிக்கேலம்மாள்–K. கைலாசபுரம், P.டோரத்தி, செல்வராயன் மரி செலீன், S. ஆரோக்கியமரி, G. அந்தோணி Rtd. Tr, A. ழன்வியோகாலின்–புதுப்பாளையம், G. மகிமைதாஸ்–மார்ட்டள்ளி, C. குப்புச்சவரி Rtd.H.M. – V. பாஞ்சாலம், A. விக்டோரியா அமல்ராஜ், சாரா சிலாஸ் – மேட்டுப்பாளையம், J. குயின் பிரியங்கா–சீகரணி, A. ரோஸ்மேரி–வீரக்குறிச்சி.

ஜூன் மாத உதவி: A.அருள்மேரி Rtd. Tr,
33, தென்வடல் வீதி, முத்துச்சாமி காலனி, கோவை–26 ●

## அருட்சகோதரி லீலி கிறிஸ்டி ME-இன் வாழ்க்கைப் பயணம்



பிறப்பு: 23-03-1955
துறவற அர்ப்பணம்: 28-04-1981
மறைவு: 24-09-2018

அருட்சகோதரி லீலி கிறிஸ்டி நெய்வேலியில் திரு அந்தோனிசாமி-பெரியநாயகம் தம்பதியர்க்கு 2-ஆவது மகளாகப் பிறந்தார்கள். தமது உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்த பின் ஈராண்டுகள் இளங்கிறிஸ்தவ மாணவ இயக்கத்தின் முழுநேர விருப்பப் பணியாளராக பணி புரிந்தார்கள். இந்தக் காலக்கட்டத்தில் ME என்னும் நற்செய்திப் பணி சபையை அறிய வந்தார்கள். இந்தச் சபையில் சேர்ந்து 1981-இல் தன் துறவற முதல் வார்த்தைப் பாட்டைக் கொடுத்தார்கள். அதன் பின் சமுதாயத் தொண்டில் ஆர்வம் கொண்டு காந்தி கிராமத்தில் பயிற்சி பெற்றார்கள். பின்னர் கல்பட்டு, இரவுத்தன்குப்பம், ஆந்திர மாநிலம் ஆகிய இடங்களிலும் பணி செய்தார்கள். பின்னர் 1993- ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டுக்கு அனுப்பப்பட்டு MEP - இன் தலைமையகம் நடத்திவரும் "பிரான்ஸ்-ஆசியா உறவு" என்னும் அலுவலகத்தில் பள்ளிச் சிறுவர் சிறுமியருக்கு மறைப்பணியின் மீது ஆர்வத்தை ஏற்படுத்தும் பணியில் ஈடுபட்டார்கள்.

அங்கு ஐந்தாண்டுகள் பணி புரிந்த பின் 1998-இல் தாய் நாடு திரும்பினார்கள். பின்னர் மத்திய பிரதேசத்தில் இண்டோரில் உள்ள எங்கள் மடத்துப் பணிகளில் ஈடுபட்டார்கள். அங்கு சிறைக் கைதிகள் மத்தியில் சிறந்த பணி புரிந்தார்கள். அதன் பின்னர் தென்னிந்தியாவுக்கு மாற்றப்பட்டு மைசூர், செங்கல்பட்டு மறை மாவட்டத்தில் உள்ள பாப்ப நல்லூர் மற்றும் சில ஊர்களில் பணி புரிந்தார்கள்.

அவர்கள் மிகவும் விரும்பிச் செய்த பணி "அன்பியம்". அன்பியத்துக்கு உதவக் கூடிய சிறு நூல் ஒன்றையும் எழுதி வெளியிட்டார்கள்.

இந்நிலையில் கடந்த நான்கு ஆண்டுகளாக அவர்களுடைய உடல் நிலை பாதிக்கப்பட்டது. மிகச் சிறந்த பராமரிப்பைச் சபை இவர்களுக்கு அளித்தது. இருப்பினும் இவர்களுடைய உடல் நலனில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. அவர்களுக்கு முழு நினைவு இருக்கும்போதே நோயுற்றோருக்கான அருட்சாதனத்தைப் பெற்றுக் கொண்டார்கள். அது அவர்களுக்குச் சற்று துணிவும் உற்சாகமும் தரவே முழு குணம் பெற்று விரைவில் மடத்துக்குத் திரும்ப வேண்டும் என்று ஆசைப்பட்டார்கள். ஆனால் இறைச்சித்தம் வேறொன்றாக இருந்தது. அவர்களை வான் வீட்டுக்கு 24-09-2018 அன்று அழைத்துக் கொண்டார்.

இறைவன் அவர்கள் ஆவலோடு எதிர் பார்த்த இறைவனின் திரு முக தரிசனம் தந்து தந்தையாம் கடவுளின் அன்பில் இளைப்பாறவும் செபிக்குமாறு உங்கள் அனைவரையும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

Sr. Lily Marie ME
புனித அந்தோனியார் அருட்கன்னியர் இல்லம்,
ஆட்டுப்பட்டி,நெல்லித்தோப்பு பங்கு, புதுவை–1.



## பொதுநிலையினரின் தலைமையில் கொண்டாடப்படும் திருவழிபாட்டு நிகழ்வுகள்

சிந்தனைச் செல்வர், பேராசிரியர் அ.குழந்தைராஜ்-காரைக்குடி

இரண்டாம் வத்திக்கான் சங்க ஏட்டின் முதல் ஏடு "திருவழிபாடு" பற்றியதாகும். வாழ்வின் ஊற்றும் உச்சியுமான திருவழிபாடு ஒரு கிறிஸ்துவனின் உயிர்நாடி. அவன் உடல், ஆன்மா, ஆவி அனைத்திற்கும் அருமருந்து. சங்க ஏட்டின் முதல் வாக்கியம் கூறுவது என்ன? "கிறிஸ்தவ மக்களிடையே கிறிஸ்தவ வாழ்வை நாளுக்கு நாள் வளப்படுத்த வேண்டும். மாற்றங்களுக்கு உட்பட்ட அமைப்புக்களை இக்காலத் தேவைகளுக்கு ஏற்ப நன்முறையில் தழுவி அமைக்க வேண்டும்..." திருவழிபாடு திருச்சபையின் செயல்களை உள்ளடக்கிய சிகரமாக உள்ளது. நம்பிக்கையாலும் திருமுழுக்காலும் கடவுளின் பிள்ளைகளாகிய நாம் முழுப்பயனை அடைய வேண்டுமென்றால் சரியான மன நிலையோடு திருவழிபாட்டில் கலந்துகொள்ள வேண்டும்.

வழிபாட்டிற்குரிய ஒட்டுமொத்தப் பொறுப்பு பொதுநிலை யினரையே சாரும். பாரம்பரிய வழிபாட்டு முறைகளை மாற்றி, 'ஏதோ பூசை பார்த்தோம்' என்ற நிலையிலிருந்து 'பூசையில் பங்கேற்றோம்' என்று சொல்லும் அளவுக்கு இரண்டாம் வத்திக்கான் சங்கம் வழிவகை செய்துள்ளது. சங்கத்தின் போதனைகளை கடந்த 40 ஆண்டுகளாக பெரிய மறை யுண்மையைப் போல மறைத்து வைத்திருந்தது ஒரு மாபெரும் தவறு. தற்போது 10 - 15 ஆண்டுகளாக அங்கொன்றும் இங் கொன்றுமாக பொதுநிலையினரின் ஈடுபாடு, அதிகரித் துள்ளது. நற்செய்திக் கூட்டங்கள், முழு இரவு செபம், அன்பியங்கள், பல்வேறு பணிக்குழுக்களின் செயல்பாடுகள், திருவழிபாட்டில் ஈடுபாட்டை சற்று அதிகரித் திருக்கிறது. ஆனால் தற்போது அசுரவேகத்தில் வளர்ச்சி பெற்றுவரும் கணினியுகத்தில் இன்னும் ஈடுபாடு அதிகமாக வேண்டும் என்ற பரவலான கருத்துப் பரவியுள்ளது.

1973 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சிறுவர்களுக்கான நற்கருணை ஒரு புதிய கருத்தியலை அறிமுகம் செய்து வைத்தது. சிறுவர்களின் உளவியல், வாழ்வு, வளர்ச்சி, எதார்த்தம் அறிவுத்திறன். செயல்பாடுகள் போன்றவை களுக்கு அடிப்படையாக திருவழிபாட்டுக் கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன. ஒரு திருவழிபாட்டு நிகழ்ச்சினையே பல்வேறு விதமாகக் கொண்ட வாய்ப்புகள் உள்ளன. இந்தத் திருப்பு முனைகள் பொதுநிலையினரை மையப்படுத்த ஏற்படுத்தப்பட்டுள்ளன. திருவழிபாடு என்பது பொது வழிபாடு (Public worship) அது ஒரு சமூகக் கொண்டாட்டம் (Community Celebration) அது ஒரு குடும்பக் கொண்டாட்டம் (Family Celebration).

"பாலஸ்தீனத்தில் கிறிஸ்தவம் எனும் மீட்புப் பிறந்தது. சுற்றுவட்டாரங்களில் அது நற்செய்தியாக மாறியது. ரோம் நகரில் அது வாழ்வியல் ஏற்றம் பெற்றது. ஐரோப்பாவில் அது கலாச்சாரமானது, அமெரிக்காவில் ஸ்டைலாக மாறி, இன்று இந்தியாவில் ஒரு தொழிலாக மாறிவிட்டது" கிறிஸ்தவம் எங்கோ போய்க் கொண்டிருக்கிறது.

வழிபாட்டு முறைகளில் கிறிஸ்தவ முறைக்கு ஈடாக இணையாக வேறு எந்த மதத்திலும் பொதுமக்களின் ஈடுபாடு இருப்பதில்லை. அவர்களின் வழிபாடு One way traffic. பக்தர்கள் 'தேங்காய் பழம் கொடுக்க' பூசாரிகள், குருக்கள் சாமிக்கு பக்தரின் பெயரால் அர்ச்சனை செய்கின்றனர். சில சமயங்களில் பக்தர்களிடம் யார் பேருக்கு அர்ச்சனை செய்யவேண்டும் என்று குருக்கள் கேட்கும் போது சாமி பேருக்கே செய்து விடுங்கள் என்று சொல்பவர்கள் ஏராளம். தான் என்ன காரிய அனுகூலத்திற்கு என்ன வேண்டுதல் களுக்கு கோவிலுக்கு போகிறோம் என்பதே தெரியாதவர்கள்.

தொடரும்...



## கடவுளின் புன்னகை

–டாக்டர் அ.மதலைமுத்து, புதுவை–3.

**ஆன்ம தேர்வு:** வாழ்க்கையில் நமக்கு தீங்கு விளைவித் தவர்கள் இருக்கிறார்கள். நாம் காயப்பட்டிருக்கிறோம், அவமானப்பட்டிருக்கிறோம், பழிவாங்கப்பட்டிருக்கிறோம். இத்தகைய இடிபாடுகளைக் கடக்காதவர்கள் இல்லை. அதனால், நம் ஆன்ம வாழ்வில் வெற்றி பெற வேண்டிய தேர்வு ஒன்று இருக்கிறது. அது, நமக்கு எதிராகக் குற்றம் செய் தவர்களை நாம் மன்னிப்பது மட்டுமல்லாது அவர்களுக்கு நன்மை செய்வதாகும். இது இமயம் ஏறும் தவம் தான். அவர்கள் இழைத்தவை நியாயம் இல்லைதான். ஆனால் கடவுள் நீதி வழங்கும் கடவுளாக இருக்கிறார்; வாழ்க்கை சக்கரத்தைச் சுழற்றுகிறார்; உங்களை அதிபராகவும் அவர்களை ஏவலர்களாகவும் மாற்றுவார்.

**கடவுளைச் சேர்ப்பவர்:** உங்களுக்கு, எல்லாம் சாதகமாக இருக்கும் போது, நீங்கள் மற்றவர்களை, முக்கியமாக உங்களை துன்புறுத்திய வர்களை எவ்வாறு நடத்துகிறீர்கள் என்பதை கடவுள் கவனிக்கிறார். எதிரிகள் இன்று உங்கள் தயவில் இருக்கக் கூடும். அவர்களை நீங்கள் பழிக்குப் பழி வாங்க நினைக்கக்கூடும். ஒரு கோணத்தில் உங்கள் கோபம் சரியானதாக இருக்கலாம். ஆனால், மன்னித்து, உதவி செய்வதன் மூலம் கடவுளின் இரக்கத்தை அவர்களிடம் சேர்ப்பதை ஆன்ம தேர்வில் வெற்றியைத் தரும்.

**பழிவாங்குதல் படுகுழி:** நீங்கள் பழிவாங்கத் துவங்கினால் ஆணவப் படுகுழியில் சிக்கிக் கொள்வீர்கள். அதனால் "ஒருவர் உங்களுக்கு எதிராக வழக்கு தொடுத்து, உங்கள் அங்கியை எடுத்துக்கொள்ள விரும்பினால் உங்கள் மேலாடையையும் அவர் எடுத்துக்கொள்ள விட்டுவிடுங்கள்" என்றுரைத்தவர் யேசு (மத்.5:40). தர்க்கரீதியாக இது சரியில்லைதான். ஆனால், இது ஒரு பரிட்சை. "பல்லுக்குப் பல்," பாராட்டத்தக்கதல்ல. பழிவாங்குதல், நம் நிம்மதியைப் பறித்துவிடும். ஆனால், இன்னல் விளைவித்தோருக்கு பரிவு காட்டினால், அதன் மூலம், கடவுளின் அன்பை மக்களைச் சுவைக்கச் செய்கிறீர்கள். ஆகவே, கடவுள் புன்னகை புரிகிறார், மகிழ்ச்சிக் கொள்கிறார். உங்களின் ஆழ்மனதில் ஒருநிறைவு, ஒரு நிம்மதி பெறுவீர்கள்.

**பிள்ளைகளுக்கு பாடம்:** சிலர் சதி செய்து உங்களின் ஒரு வாய்ப்பை அல்லது பதவி உயர்வைப் பறித்திருக்கக் கூடும். ஆனால், நீங்கள் யோசேப்பைப் போல (தொ.நூ.42) ஒருநாள் அதிகாரத்திற்கு வருவீர்கள். அப்பொழுது, யோசேப்பைப் போல உங்கள் மன்னிப்பையும், தாராள மனதையும் வழங் குங்கள். இது கசப்பான அனுபவமாக இருநதாலும், கடவுளின் புன்னகைக்காகச் செய்கிறேன் என்று செய்யுங்கள். இது உங்கள் பிள்ளைகளுக்கு சிறப்பான முன் உதாரணமாகும். நீங்கள் எப்பொழுது, எப்படி ஏன் நடந்து கொள்கிறீர்கள் என உங்கள் பிள்ளைகள் உற்று கவனிக்கிறார்கள், பாடம் கற்பிக்கிறார்கள்.

**லட்டுக்கு ஜிலேபியா?:** கடவுள், நம்மைச் செய்யச் சொல்லும் ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டு, "உங்கள் பகைவர் களுக்காகச் செபியுங்கள்" போன்ற காரியங்கள் நகைப்புக்குரியது, நடைமுறை சாத்தியமில்லை என்று சிலர் கருதக்கூடும். போர் ஆயுதங்களை போட்டி போட்டுக்கொண்டு தயாரித்துக் கொண்டு, ஆண்டுக்கு ஆண்டு போர் ஒத்திகைகள் செய்து கொண்டு இரண்டு பக்கமும் ஆயுங்களை இரகசியமாக விற்றுக்கொண்டு, போர் களை ஒழிக்கிறோம் என்பது தான் நடைமுறை சாத்திய மில்லை. மக்கள் மேல் வெறுப்பை அன்றாடம் உமிழ்ந்து கொண்டு, "நாங்கள் நாட்டை காப்பாற்றுவோம்" என்பதுதான் நகைப்புக்குரியது. இப்படித் தொடர்ந்து துன்ப அலைகள் தாக்குகின்றதே என்று நீங்கள் மனமுடையக் கூடும். அனால், கடவுள் அவைகளைப் பட்டியலிட்டு ஒரு கோப்பாக வைத்திருக்கிறார். ஆண்டவர் உங்கள் வலிகளுக்கான வெகுமானத்தைத் தரும்போது அது வியப்பானதாக இருக்கிறது. உங்களைக் காலை வாரியவர் களை கைகொடுத்து தூக்குவது கடவுளை புன்னகைக்க வைக்கிறது.

**அடிமையும் அதிகாரியும்:** யோசேப்புக்கு அவருடைய சகோதரர்கள் துரோகம் செய்தார்கள், அவரை கிணற்றில் வீசினார்கள், அடிமையாக விற்றார்கள். அவர் எகிப்து மன்னரின் மனைவியால் குற்றம் சாட்டப்பட்டார், சிறையில் அடைக்கப்பட்டார். துன்ப நேரங்களிலேயும் கடவுள் நீதியுள்ளவர், நல்லது நடக்கும் என்று அவர் நம்பினார். சரியானவைகளையே செய்து கடவுளுக்கு நம்பிக்கைக்குரியவரானார். கடவுள் யோசேப்பை எகிப்தின் அதிகாரி யாக உயர்த்தினார். பஞ்ச காலத்தில் அவருடைய சகோதரர்கள் எகிப்திற்கு யாசகம் பெற வந்தனர். யோசேப்பு அவர்களை மன்னித்தார், தாரா ளமாக கொடுத்தனுப்பினார். (தொ.நூ.37:-47) நீங்களும் மக்களை மன்னித்து, உதவி செய்து கடவுளின் புன்னகை முகத்தை மக்களுக்கு காட்டுவீர்களா?



# உலக மீட்பர் காப்பியம்

பேராசிரியர், முனைவர். **ச.சாமிமுத்து,** திருச்சி.



**20ஆம் படலம்**

ஆண்டவர் மோசேயை நோக்கி, எகிப்து நாடெங்கும் – எகிப்து நாட்டிலுள்ள மனிதர், விலங்கு, வயல் வெளியிலுள்ள பயிர் பச்சை இவற்றின்மேல் – கல்மழை பொழியுமாறு உன் கையை வான்நோக்கி நீட்டு என்றார். மோசே தம் கோலை வானோக்கி நீட்டவே, ஆண்டவர் இடிமுழக்கங்களையும், கல்மழையையும் அனுப்பினார். நிலத்தில் நெருப்புப் பாய்ந்து வந்தது. எகிப்து நாடெங்கும் கல்மழை பெய்வித்தார் ஆண்டவர். கல்மழை பெய்தது – விப.9:22–24.

காப்பியப் பாடல் 1007

**படலப் பாடல் 53 மோசே பார்வோனிடம் "நாடு ஆண்டவருடையது" என்று கூறியபோது அவன் ஏன் அவ்வாறு அவர் கூறியதைக் கேட்டுப் படபடத்து மறுத்துக் கூறாது அமைதியாக இருந்தான்? காரணம் ஆண்டவரின் வல்லமை அரியது, பெரியது என்பதை அவன் உணர்ந்தான். அதனால், பார்வோன் மறுக்காது மௌனமாய் இருந்தான்!**

இடிஎன்ன மழைஎன்ன எதுவென் றாலும்,
இருக்கட்டும் அதைநானும் பார்ப்பேன் என்னும்
முடிவுடனே பார்வோன்ஏன் இருக்க வில்லை?
மோதுபுயல் கண்காது முகத்தை யெல்லாம்
தடியெடுத்தே அடித்தழிப்பார் போன்றே தாக்க
தாக்குமது இறையாற்றல் என்றே கண்டான்!
படிதனிலே காலெடுத்து வைக்கும் முன்பே
படியெழுந்து தாக்குகையில் அவன்என் செய்வான்!

காப்பியப் பாடல் 1008

**படலப் பாடல் 54: விப 9:27- பார்வோன் ஆளனுப்பி மோசேயையும் ஆரோனையும் கூப்பிட்டான். அவன் அவர்களை நோக்கி, "நான் இம்முறை பாவம் செய்துவிட்டேன். ஆண்டவரே நீதியுள்ளவர். நானும் என் மக்களுமே தீயவர்" என்றான்.**

எனவேதான் தனக்கில்லை ஆற்றல் ஏதும்
எதிர்ப்பதற்கு எனவுணர்ந்த மன்னன் பார்வோன்,
தனக்குள்ளே மும்முரமாய் ஆய்ந்து பார்த்தான்;
தன்தீதும் பாவமுமே மழையாய் மாறி
மனங்குன்ற வைத்திங்கே வதைக்கு தென்றே,
மன்னனவன் வழியின்றி அழைத்து மோசே
'தனக்கிந்த கல்மழையை நிறுத்து தற்குத்
தக்கதுணை புரிந்துதவ வேண்டும்' என்றான்!

காப்பியப் பாடல் 1009

**படலப் பாடல் 55 : (விப.9:25-26) "எகிப்துநாடு முழுவதிலும் மனிதர் முதல் விலங்குவரை வயல்வெளியில் இருந்த அனைத்தையும் கல்மழை தாக்கியது; மேலும் வயல்வெளியில் பயிர்பச்சை யாவற்றையும் பாழ்படுத்தியது; வயல்வெளி மரங்கள் அனைத்தும் முறித்தெறிந்தது. இஸ்ரேயேல் மக்கள் தங்கியிருந்த கோசேன் நிலப்பகுதியில் மட்டும் கல்மழை பெய்யவில்லை."**

அவனறிந்தே வியந்திட்டான்! கோசேன் மண்ணில்
அவன்நாட்டின் ஒருபுறத்தில் இசுர யேலர்,
அவதியுறா திருப்பதையே ஆய்ந்து பார்த்தான்;
அதற்கெல்லாம் காரணமாய் இருப்ப வர்தாம்
தவறெதுவும் செய்யாத இசுர யேலர்
தம்கடவுள் எனும்உண்மை தெரிந்தே கொண்டான்;
அவர்துணையால் கல்மழைதான் நிற்கும் என்றே
அரசனவன் நம்பிவழி ஆய்ந்தே பார்த்தான்.

காப்பியப் பாடல் 1010

**படலப் பாடல் 56 : மாமன்னன் பார்வோன் பாவம்செய்து விட்டதாகவும் ஆண்டவரே நீதியுள்ளவராய் இருப்பதாகவும் கூறியது அத்துயரச் சூழ்நிலையின் நெருக்கடியால் என்பது மோசே நன்கு புரிந்து கொண்டார். மேலும், மோசே நாற்பது ஆண்டுகள் அரண்மனையில் எகிப்திய இளவரசராக வளர்ந்து வாழ்ந்தவர்தாமே! மன்னன் ஓர் ஒட்டுறவின் உந்ததலால் இவ்வாறு கூறுகின்றான் என்பதையும் அவர் அறிவார்.**

தாண்டரிய நெருப்பாற்றின் கரையில் நின்றே
தவித்துலைந்த மாமன்னன் கடக்க ஆற்றை,
மூண்டெழுந்தன் வெறுப்புணர்வை மூட்டை கட்டி
முதுகிலவை மறைந்திருக்க விட்டான் தொங்க;
ஆண்டிருந்த மோசேதம் சொல்லுக் கேற்ப
அவனிணங்கி மனமாற்றம் கொண்டான் போலே
தூண்டுணர்வின் பொய்ப்பிடிக்குள் மன்னன் நிற்க,
துல்லியமாய் அவனறிந்தே மோசே சொன்னார்.

தொடரும்....

# பொது அறிவு இருக்க வேண்டும்

–G. *பொனிபாஸ் ஜூலியன்*, புதுவை–9.



ஒரு விதவைத் தாய், தன் ஒரே மகனை எப்படியோ கஷ்டப்பட்டு வளர்த்து வந்தாள். உயர்கல்வி படிக்கும் அளவுக்கு அவனுக்கு ஊக்கமும், ஆக்கமும் கொடுத்து அவனை வழி நடத்தினாள். இவளுக்கு ஒரு நிரந்தர வருமானம் இல்லை பலருடைய உதவியால்தான். இவளுடைய குடும்ப சக்கரம் சுழன்று கொண்டிருக்கிறது. மகன் வேலைக்குச் செல்ல தயார் நிலைக்கு வந்துவிட்டான். பல இடங்களில் விண்ணப்பித்து இருந்தான். இன்னும் சொல்லப் போனால் பல வெளிநாடுகளுக்கும் மனுக்களை அனுப்பினான். தாயினுடைய வேண்டுதலோ, என்னவோ மகனுக்கு அமெரிக்காவிலிருந்து வேலை வந்தது. தான் அமெரிக்கா சென்று தன் குடும்பத்தை உயர்த்தவும் தன் தாயின் ஏழ்மை நிலையை போக்கவும், எல்லோரிடமும் ஆசிபெற்று அமெரிக்கா சென்றான். தாய்க்கு ஒரே மகிழ்ச்சி. இதுவரையிலும் என் மகனை தோளில் தூக்கி வைத்து கொண்டிருந்தேன். இனி வருங்காலத்தில் என் மகன் என்னை அவன் தோள்மீது தூக்கி வைத்திருப்பான் என கனவு கொண்டிருந்தாள்.

தாய் அவளோ படிக்காதவள், ஓரளவுக்கு புரிந்து கொண்டு குடும்பத்தை நடத்துவாள். அமெரிக்கா சென்ற முதல் மாதமே தன் மகனிடம் இருந்து கடிதம் வந்தது. கடிதத்துடன் பல படங்களும் வந்ததாக உணர்ந்தாள். இந்த கடிதத்தை படிக்கவும் இல்லை, மற்றவர்களிடம் காட்டி தெரிந்து கொள்ளவும் விரும்பவில்லை. இப்படியாக மாதம் மாதம் மகன் கடிதமும் சில படங்களும் அவள் எண்ணியதுபோல் அனுப்பி வைத்தான்.

தாய்க்கு ஒரே ஆதங்கம், வங்கியின் மூலமாகவோ அமெரிக்காவிலிருந்து இங்கு வருபவர்கள் மூலமாகவோ எனக்கு பணம் அனுப்பி இருக்கலாம். அதை விட்டு மாதம் மாதம் கடிதமும், படங்களும் அனுப்பி என்ன பயன், மிகவும் வறுமையிலே வாழக் கூடியவர்களாக வந்துவிட்டார். அக்கம் பக்கத்தினருக்கு மகன்மேல் ஒரே கோபம்; தன் தாய்க்கு செய்யும் கைமாறு இதானா! எல்லோரும் ஒன்று சேர்ந்து தாயினுடைய நிலையை குறித்து மகனுக்கு கடிதம் அனுப்பினார்கள். ஏறக்குறைய இது 2-3 ஆண்டுகள் ஓடிக்கொண்டிருக்கும். கடிதத்தை கண்ட மகன் தன் தாயின் ஏழ்மை நிலையை நினைத்து உடனே இந்தியா திரும்ப முடிவு செய்தான். நீண்ட நேர பயணத்திற்கு பிறகு தன் தாயை தன் இல்லத்தில் சந்தித்தான். எனம்மா உனக்கு இந்த நிலை 'அதற்கு தாய் வெறும் கடிதமும் படங்களும் மட்டும் அனுப்பி என்ன பயன். எனக்கு பணம் அனுப்ப வேண்டாமா? என்று கேட்டாள். ஒன்று மட்டும் தாயினுடைய புத்திசாலித்தனம் எந்த கடிதத்தையும் கிழித்துபோடவில்லை. எல்லாவற்றையும் அடுக்கி வைத்திருந்தாள். மகன் ஒரு கடிதத்தை வாங்கி அதை பிரித்து, அம்மா! இது **வெறும் படமல்ல அவ்வளவும் டாலர்ஸ்** இதை நீ பயன்படுத்தியிருந்தால் இன்றைக்கு நீ ஒரு பெரிய மெத்தை வீட்டில் வசிப்பாய் என்று கூறினான். இருவர்களுடைய கண்களும் கலங்கியது. மற்றவர்களிடம் காட்டி இருந்தால்கூட இது படமல்ல இது டாலர், நிறைய ரூபாய் மதிப்புண்டு என்று கூறியிருப்பார். நமக்கு தெரியாததை மற்றவர்களிடம் கேட்டு தெரிந்து கொள்ளும்போது ஒன்றும் அவமான செயலல்ல. இதற்குத் தான் சற்று பொது அறிவு வேண்டும் என்று கூறுவார்கள். சிலர் எல்லாம் தெரியும் என்று சொல்லிக் கொண்டு கோட்டையை விட்டுவிடுவார்கள். ஒரு மனிதனுக்கு அனைத்தும் தெரிந்து கொள்ள வாய்ப்பில்லை. அதே சமயம் தனக்கு எல்லாம் தெரியும் என்று கூறுவதும் சரியல்ல. பொது அறிவை பயன்படுத்தி சமுகத்தில் விழிப்புணர்வோடு இருப்போம்.●



திரு. **ஆன்ட்ரு எலியாஸ்**

**தோற்றம் : 30-11-1941**
**மறைவு : 08-10-2003**

# விண்ணக வாழ்வின்
# 15-ஆம் ஆண்டு நினைவு

ஆண்டுகள் 15 கடந்தாலும்
ஆறாத உம் பிரிவு
நலிவுற்ற நிலையிலும்
நித்தம் ஆலயம் சென்று
நாளின் பெரும் பொழுதையும்
நாதனின் திருப்பாதம் அமர்ந்து
நாளும் ஜெபத்தில், வேத வாசிப்பில்
உறுதியாக தரித்து,
அனைவரும் சூழ, அமைதியாய் கண்மூடினீர்.
விண்ணில் காண்போம் ஒரு நாள்.

என்றும் உம் நினைவில்
**ஸ்டெல்லா எலியாஸ்**
**சாவியோ ரொசார் - மங்களம்**
**ஜெரால்டின் அனித்தா - யுவராஜ்**
**ரேச்சல் - ஆண்ட்ரு ஜோசுவா - ஆண்ரியா பியூலா**

திருப்பலி: இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 08-10-2018 திங்கள் காலை 5.30 மணிக்கு புதுவை, **திரு இருதய ஆண்டவர் பசிலிக்காவில்** திருப்பலி நிறைவேற்றப்படும்.

---

விண்ணக பிறப்பின்
18-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

விண்ணக பிறப்பின்
39-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

பிறப்பு: 17-4-1911
இறப்பு: 7-10-2000



பிறப்பு: 17-2-1923
இறப்பு: 23-6-1979

திரு. **M.சந்தனம்** ஆசிரியர். திருமதி. **V.S.பிரான்சிஸ்கா**

இறைவா, இறந்த எம் பெற்றோர் உம் திருமுக ஒளியில் இளைப்பாறச் செய்தருளும்.

**நினைவுத் திருப்பலி:** 7-10-2018 ஞாயிறு காலை 6.00 மணிக்கு இறையூர், புனித ஜெபமாலை அன்னை ஆலயத்திலும், காலை 6.30 மற்றும் மாலை 5.30 மணிக்கும் புதுவை, புனித ஜென்ம இராக்கினி மாதா பேராலயத்திலும் திருப்பலி நிறைவேற்றப்படும். இதை கண்ணுறும் அனைவரும் இவர்களது ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

*என்றும் இவர்கள் நினைவில் வாழும் பிள்ளைகள்*

**Fr.** அல்போன்ஸ் சந்தனம்
**Fr.** ஜான் பீட்டர் சந்தனம்
**Mr.** ஆல்பெர்ட் லீனூஸ் சந்தனம்
லீமா ரோஸ் ஆல்பெர்ட் லீனூஸ்

மரிய தெரேஸ்-V.P.அந்தோணிசாமி (லேட்)
இருதயமரி - V.M.சூசைநாதன்
(லேட்) லில்லி கேத்ரின்- (லேட்) அந்தோணிசாமி
பேரப்பிள்ளைகள், உறவினர், நண்பர்கள்.

எறையூர்.

---

**விண்ணக வாழ்வின்**
**30-ஆம் நாள் நினைவு அஞ்சலி**

தோற்றம்: 10-03-1948



மறைவு: 06-09-2018

திரு.**செ.ஜோசப் அலெக்சாண்டர்**
(உடற்பயிற்சி ஆசிரியர், ஓய்வு)

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோவான்.11:25

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 05-10-2018 சனிக்கிழமை காலை 6.15 மணிக்கு கடலூர், சாமுபிள்ளை நகரிலும், காலை 6.00 மணிக்கு எருக்கூரிலும், வில்லியனூர் புனித லூர்து அன்னை ஆலயத்தில் காலை 6.00 மணிக்கும் திருப்பலி நிறைவேற்றப்படும்.

**இப்படிக்கு**

மனைவி: S.M. **செல்வி ஆன்**
J. ஹென்றி லூர்துராஜ் - வாணி
J. பொரோமியோ சகாய ஆண்டனி - நிர்மல் ஸ்டெபியா
J. கிளாடியா அமலி - J. அகஸ்டின்
மற்றும் பேரப்பிள்ளைகள்.
கடலூர்.

**நித்திய இளைப்பாற்றியை இவர்களுக்கு அளித்தருளும் ஆண்டவரே!**

# விண்ணக வாழ்வின் 10-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி







பிறப்பு
27-02-1923

இறப்பு
06-10-2008

## திரு. எவாரீஸ்த் முத்தப்பா

"அவரை உம்முடைய சமூகத்தின் மகிழ்ச்சியினால் பூரிப்பாக்குகிறீர்" - (சங்.21:3,6)

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இன்று வானுறையும் இறைவனில் இன்ப நிலை காணும் எம் இனிய தெய்வமே! மறைந்த பத்தாண்டில் நீவிர் விட்டுச் சென்ற வெற்றிடத்தை என் நினைவுகளைக் கொண்டு நிரப்ப முடியவில்லையே!**

**இரக்கத்தின் இறை இயேசுவே! எம் தந்தையின் குறைகளை பொறுத்து, அவரின் நிறைகளை நினைந்து நித்திய இளைப்பாற்றியும் உத்தான வாழ்வும் அளித்தருளும்.**

**- ஆமென். (ஒரு கர்.மங்.திரி.)**

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 06-10-2018 சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு, புதுவை புனித ஜென்ம ராக்கினி அன்னை பேராலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்படும்.இதை கண்ணுறும் அனைவரும் இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக ஜெபிக்க வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்

மகள்: **Francoise Marianadin குடும்பத்தினர்.**

மகன்: **Raymond Mouttapa**

**மற்றும் பேரப்பிள்ளைகள், கொள்ளுப்பேரப்பிள்ளைகள்.**

**ஆண்டவரின் கரத்தில் நீர் மணிமுடியாய்த் திகழ்வீர்.**

**80 வயதானவர்களுக்கு வீட்டு வாசலில் வங்கி வசதி:** இந்தியன் ஓவர்சீஸ் வங்கி சார்பில் அக். 1ம் தேதி முதியோர் தினம் கொண்டாடப்பட்டது. அப்போது 80 வயதை எட்டிய முதியோருக்காக 'ஐஓபி 80 பிளஸ்' என்ற புதிய சேவையை அறிமுகப்படுத்த உள்ளது என அறிவிக்கப் பட்டது. சென்னையில் சில குறிப்பிட்ட கிளைகளில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. விரைவில் மற்ற கிளைகளிலும் இந்த சேவை கிடைக்கும். - இந்து. 3.10.18

**சர்வதேச செலாவணி நிதியத்தின் (ஐஎம்எஃப் - IMF)** தலைமைப் பொருளாதார ஆலோசகராக, இந்திய வம்சாவளியைச் சார்ந்த பொருளாதார வல்லுநர் **கீதா கோபிநாத்** நியமனம் செய்யப்பட்டுள்ளார். ரிசர்வ் வங்கியின் முன்னாள் கவர்னர் ரகுராம் ராஜனுக்கு பின்னர் நியமிக்கப்படும் 2-ஆவது இந்தியர் கீதா கோபிநாத் தற்போது ஹார்வார்ட் பல்கலைக் கழகத்தில் உள்ள சர்வதேச கல்வி மற்றும் பொருளாதார துறையில் பேராசிரியராக பணியாற்றி வருகிறார். *- இந்து 3-10-18.*

**திருத்தந்தை ஜப்பான் நாட்டுக்கு திருப்பயணம்:** 12-9-2018 அன்று ஜப்பான் நாட்டு கலாச்சார அமைப்பு உறுப்பினர்களை திருப்பீடத்தில் சந்தித்த திருத்தந்தை, தாம் அடுத்த ஆண்டு 2019-இல் ஜப்பான் நாட்டுக்கு திருத்தூது பயணம் மேற்கொள்ள இருப்பதாக தெரிவித்தார். - CNS

**புதிய ஆயர்களுடன் திருத்தந்தை:** உரோமில் அண்மையில் புதிய ஆயர்களை சந்தித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நீங்கள் இறைவனால் தனிப்பட்ட வகை யில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளீர்கள்; எனவே, உங்களது அர்ப்பணம் எப்பொழுதும், இரவும் பகலும் தொடர்ச்சியாக வழங்கவேண்டிய ஒன்றாகும். மேலும், ஒளி மறையும் போதும், மங்கும் போதும், இறைவனே உங்களிடமிருந்து விலகி நிற்பதாக உணரும் போதும், பின்வாங்கும் சோதனை தோன்றும்போதும், விடியல் இப்போது தோன்றப் போவதில்லை என தீயவன் சோதிக்கும்போதும், நீங்கள் விழிப்பாயிருப்பது அவசியம் என்று கூறினார். - வத்.வானொலி.

**பிரான்ஸ்: முத்திபேறு பெற்ற அன்னை அல்போன்ஸ் மரி எப்பிங்கர்:** பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிரான்ஸ் நாட்டின் இறையுணர்வாளரும் (Mystic), துறவு சபை நிறுவனருமான அன்னை அல்போன்ஸ் மரி எப்பிங்கர், அவரது சொந்த ஊரான ஸ்ட்ராஸ்புர்க் நகரில் உள்ள நோத்ர் தாம் பேராலயத்தில் கடந்த 9-9-2018 ஞாயிறு அன்று, புனிதர் பட்டமளிப்பு பேராயத்தின் தலைவர் கர்தினால் ஜியோவான்னி ஆஞ்செலோ பெக்சியு அவர்களால் முத்திப்பேறு பெற்றவர் என்று அறிவிக்கப்பட்டார். அவரிடம் மன்றாடி அவரது பரிந்துரையால் புதுமையாக ஒருவருக்கு உடல் நலம் பெற்றதை திருப்பேராயம் உறுதி செய்தபின் இந்த அறிவிப்பு இடம் பெற்றது. அவரது ஆன்ம வழிகாட்டியாயிருந்த அருட்திரு. ழான் டேவிட் ரெய்ஷார்ட் அவர்கள் அன்னையின் பரிந்துரையால் மனம் மாறியவர் களின் நல்வாழ்வு, இறந்தோரினின்று ஒருவர் உயிருடன் எழுப்பப்படுவது போன்ற உணர்வைத் தந்தது என்று நினைவு கூர்ந்தார்.- CNA

**இலங்கை:** மனித உரிமை குழுக்கள், போர்க்குற்றங் களால் பாதிக்கப்பட்டவர்களுக்காக முறையீடு செய்ததின் பொருட்டு, இலங்கையில் போர் நடந்த வேளையில் இறந்தவர்கள் கும்பலாக அடக்கம் செய்யப்பட்ட இடத்தைத் தோண்டி 114 (12 சிறுவர்களும் அடங்குவர்) பேரின் எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அங்குள்ள தமிழர்கள், இந்த எலும்புக்கூடுகளில் தங்களது இறந்த உறவினர்களின் எலும்புக்கூடுகளும் உள்ளனவா என்று தெரிந்துகொள்ள மக்கள் ஆர்வம் காட்டி வருகிறார்கள். 2009-இல் இலங்கையில் இராணுவத்தினரும் தமிழ் ஈழப் புலிகளும் நடந்த கடுமையான போரின் துயர நினைவுகளை இப்பகுதி நினைவுட்டுவதாக மனித உரிமை கழகத்தார் தெரிவிக்கின்றனர். - UCANEWS

**இந்தியா:** இந்தியாவில் இன்று கல்வி அறிவு பெற்ற பெண்கள் வெறும் 54 விழுக்காட்டினர்தான். கிராமப்புறம், நகர்புறம் என வேறுபாடு இல்லாமல், பெண்களுக்கான கல்வி குறைவாகவே இருக்கிறது. இந்த 54 விழுக்காட்டில் ஏறத்தாழ 20 விழுக்காட்டுப் பெண்கள் வெறும் கையெழுத்து மட்டுமே போடத் தெரிந்தவர்கள்.

(கல்வி சமத்துவமே தேவை - தினமணி 3.10.18)

---

## முழுத் திருப்பலி எது?

"அடிக்கடி என்னிடம் தனியே வந்து போங்கள்
அமைதியில் ஆலயத்தில் என்னோடு உரையாடுங்கள்
அப்போதுதான் பிறர் உங்களை என்முன் தூக்கி வரும் போது
அன்போடு நான் 'உங்களைத் தெரியும்' எனக் கூற முடியும்."

- திவ்ய நற்கருணையில் இயேசு.

❖ தாமதிப்பது வாழ்வில் - நம்மைத்
தகுதியிழக்கச் செய்கிறது!
திருப்பலிக்குத் தாமதிப்பதின் விளைவு
திருநன்மை பெறத் தகுதியின்மை!

❖ தாமதமின்றித் திருப்பலிக்குச் செல்வது
தியாகத்தின் அடையாளம்!
தாமதமாய்த் திருப்பலிக்குச் செல்வது
திருவிருந்துண்ணத் தகுதியின்மையின் அடையாளம்!

❖ ஆரம்ப முதல் பூசையில் பங்குபெறுவோரே
திருநன்மை பெறுவர்
ஆலயம் நுழைபவரெல்லாம்
திருநன்மை பெறத் தகுதி பெறுவதில்லை!

❖ உரிய நேரத்தில் ரயில் நிலையம் செல்லாமல்
தொடர் வண்டியில் முன்பதிவு பயனற்றது!
உரிய நேரத்தில் திருப்பலிக்குச் செல்லாமல்
திருவிருந்தில் பங்குபெறுவதும் பயனற்றது!

❖ பந்திக்கு முந்து என்பது போல - திருப்பலிக்கும்
பிந்தாமல் முந்தி இருப்பதே - திருவிருந்திலும்
பங்குபெற முழுத் தகுதி தரும்.

❖ திருப்பலியில் இறுதி ஆசீர் பெறாமல்
திருநன்மை பெற்றதும் வெளியேறுவது
திருஅப்பம் பெற்றவுடன் யூதாஸ்
திருப்பந்தியை விட்டுச் சென்றதற்குச் சமம்!

❖ ஆண்டவரின் திருவுடல் பெற்றபின்
இறுதி ஆசீர் பெறாமல்
ஆலயம் விட்டுச் செல்வது
ஆண்டவரை அவமதிப்பதாகும்!

❖ திரியேக கடவுளின் பெயரால் துவங்கி - அதே
திரியேக கடவுளின் பெயரால்
திருவிருந்திற்குப் பின் குரு வழங்கும்
திரு ஆசீரையும் பெறுவதே முழுத்திருப்பலி!

- தந்தை ஜெயபாலன்.

***Printed and Published* on behalf of Most Rev.** Dr. A. ANANDARAYAR, Archbishop of Pondicherry & Cuddalore,
by Rev. Fr. **C.ANTONI ROCHE**, Manager, MISSION PRESS & Editor, Sarva viabi, 196, Cathedral Street, Pondicherry - 605 001.